18TH DECEMBER 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 61 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

## புலமைப் பரிசில் விவகாரம்; 31ல் இறுதித் தீர்மானம்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக பெற்றோர்கள் வழக்கு தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் எதிர்வரும் 31 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிந்ததையடுத்து மாணவர்களின் பெற்றோர்களால் தமது பிள்ளைகளுக்கான நியாயத்தை 02ம் பக்கம்பார்க்க...

# மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படாது



### வாகன இறக்குமதிக்கு அனுமதி

### உழைக்கும் போது செலுத்தும் வரி குறைப்பு

### அஸ்வெசும கொடுப்பனவு தொடர்பில் மறுபரிசீலனை

### ஜனாதிபதி பாராளுமன்றில் அதிரடி அறிவிப்பு

2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்று மீண்டும் ஏற்பட எமது அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது என்றும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் தனியார் பாவனைக்கான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார்.

நாடாளுமன்றத்தில் இன்று புதன்கிழமை விசேட உரையொன்றை நிகழ்த்திய போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

"2028ஆம் 02ம் பக்கம்பார்க்க...



# போலியான சான்றிதழ்கள் என்னிடம் கிடையாது

### நிரூபித்தால் அரசியலில் இருந்து விலகுவேன்!

### பாராளுமன்றில் சஜித் பிரேமதாச திட்டவட்டம்!!

நான் போலியான கல்விச் சான்றிதழ்களை முன்வைத்ததில்லை. அவ்வாறு செய்திருப்பதாக நிரூபித்தால் அரசியலில் இருந்து விலகுவேன். 04ம் பக்கம்பார்க்க...

## உதயம் ஆசிரியர் உட்பட பலருக்கு பத்திரிகை பேரவை மாநாட்டில் கௌரவம்



(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கை பத்திரிகையாளர் சங்கம் 69ஆண்டு 02ம் பக்கம்பார்க்க...

## குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் எம்.பீ பதவியை துறப்பேன்



### தன் மீதான குற்றச்சாட்டு நாமல் காட்டம்!

தனது கல்வி தகைமை தொடர்பான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் தான் நாடாளுமன்ற பதவியில் இருந்து விலகுவதாக மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச பகிரங்க அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் இன்று 03ம் பக்கம்பார்க்க...

## வாகன இறக்குமதி; வெளியானது வர்த்தமானி



ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் கையொப்பத்துடன் வாகன 03ம் பக்கம்பார்க்க...

## சாதாரண தர பரீட்சை மார்ச் 17ல் ஆரம்பம்!

கல்விப் பொதுத் தராதரப் சாதாரண பரீட்சை மார்ச் மாதம் நடைபெறும் என பரீட்சைகள் 03ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

## உதயம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

*விழாவும் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் 10 பேரைக் கௌரவிக்கும் நிகழ்வு இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் குருலு கூச்சனா காரியகரவனா தலைமையில் இலங்கை மண்றக் கல்லூரியில் 17 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஊடக தகவல் துறை பிரதியமைச்சர் வைத்தியர் ஹன்சக்க விஜயமுனி அவர்கள் கலந்து கொண்டார். காரிய கர்ண நினைவரங்கில் இம்முறை சிரேஸ்ட ஊடகவியலாளர் களான தயா லங்காபுர, என். எம் அமீன், வி தனபாலசிங்கம் திருமதி சீலா விக்கிரமரமசிங்க, பி.பி. இலங்கசிங்க, ஸ்டான்லி சமரசிங்க, எஸ்.எஸ் செல்வநாயகம் துசித்த மல்லசேகர, அலேக்சாந்திர பாலசூரிய , ஆகியோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.*

*கடந்த 69 வருடங்களாக இந்த நாட்டில் தலைசிறந்த ஊடகவியலாளர்கள் ( பத்திரிகை ஆசிரியர்கள், செய்தி ஆசிரியர்கள்) பல தசாப்தங்களாக இந்த நாட்டிக்கு சிறப்பான ஊடகப் பணி செய்தவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு பணப் பரிசில் வழங்கி இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் கௌரவித்து வருகின்றமை பாராட்டக் குரியது. இந்த நாட்டின் சிங்கள மூத்த பத்திரிகையாசிரியரான காலம் சென்ற காரியகர்வன்ன அவர்கள் இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினை 1955ல் ஸ்தாபித்தார்கள். இன்று 69 வருடமாக பாராட்டு நிகழ்வினை இந்த நிறுவனம் செய்வதோடு தமிழ் முஸ்லிம் சிரேஸ்ட எழுததாளர்கையும் இனம் கண்டு அவர்களையும் கௌரவித்து வருகின்றமை குறிப்பிடததக்கதாகும்.*







## மீண்டும் பொருளாதார...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஆண்டுமுதல் நாம் கடனை மீள செலுத்த வேண்டும் கருத்தொன்றை சமூகத்தில் பரப்பி வருகின்றனர். சில பொய்யான தகவல்களை பரப்பி வருகின்றனர். 2028ஆம் ஆண்டாகும் போதும் எமது அரசாங்கம்தான் இருக்கும் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

2022, 2023இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியான நிலைமையை மீண்டும் ஒருபோதும் ஏற்பட நாம் அனுமதியளிக்க மாட்டோம். 12.5 பில்லியன் சர்வதேச கடன் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதில் 11.5 பில்லியன் டொலர் 2015 மற்றும் 2019 இற்கு இடைப்பட்ட காலத்தில் பெறப்பட்ட கடனாகும். ஆலோசனைகள் கூறுபவர்கள் அப்போது அவர்களுக்கு கூறியிருக்க முடியும். 2028 ஆம் ஆண்டளவில் நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பை 15.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்த்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

உழைக்கும் போது செலுத்தும் (PAYE) வரி விலக்கு வரம்பை ரூகப 100,000 முதல் 150,000 ரூபா வரை அதிகரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் (ஐஆகு) அரசாங்கம் உடன்படிக்கைக்கு வந்துள்ளது.

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் (EFF) மூன்றாவது மீளாய்வு தொடர்பாக ஐ.எம்.எப். உடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, வருமான வரி வரம்பை அதிகரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

புதிய வரி திருத்தங்களின் பிரகாரம் தனிநபர் வருமானமாக ரூ. 500,000 முதல் ஒரு மில்லியனை பெறுபவர் வரியின் முதல் கட்டத்தில் உள்ளடகப்பட்டுவதுடன், அவர் 6 வீத வரி விகிதத்திற்கு உட்படுவார். 150000 ரூபாவுக்கு குறைவான வருமானத்தை பெறுபவர்கள் முழுமையாக வரி விலக்குக்கு உட்படுவர். 2 இலட்சம் ரூபா வருமானம் பெறுபவருக்கு 71 வீதம் விரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது,

ரூ.250,000 வரை வருமானம் பெறுபவருக்கு 61 வீதமும், 300,000 ரூபா வரை வருமானம் பெறுபவருக்கு 47 வீதமும், 350,000 ரூபா வரை வருமானம் பெறுபவருக்கு 25.5 வீதமும் அளிக்கப்பட்டுள்ளது. வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் குறைவான வருமானம் பெறுபவர்களுக்கு அதிகமான வரியும் அதிக வருமானம் பெறுபவர்களுக்கு குறைவான வரியும் காணப்பட்டது. தற்போது, குறைவான வரி பெறுவோருக்கு குறைவான வரியும் அதிக வருமானம் பெறுபவர்களுக்கு அதிக வரியும் அறவிடும் முறை உருவாகியுள்ளது.

தடுத்து வைக்கும் வரி 5 வீதத்திலிருந்து 10 வீதமாக அதிகரிக்கப்படும். சேவைகள் ஏற்றுமதிக்கான வரியை 30 வீதத்திலிருந்து 15 வீதமாக குறைக்க சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் தனியார் வாகங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி முதல் போக்குவரத்து மற்றும் விசேட தேவைக்கான வாகனங்கள் இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் தனியார் பயன்பாட்டுக்கான வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வாகன இறக்குமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதுடன், ஊடாக மீண்டும் டொலர் நெருக்கடிக்கு நாடு முகங்கொடுக்காது. அதற்கான மாற்று வழிகள் உருவாக்கப்பட்டள்ளது. வாகன சந்தையும் அதை சார்ந்த தொழில்துறையும் மிகவும் பெரியது. நீண்டகாலம் இதனை மூடி வைத்திருக்க முடியாது.

இதுவேளை, அஸ்வெசும கொடுப்பனவு கிடைக்கபெறாத மற்றும் அதற்கு தகுதியுள்ளவர்கள் தொடர்பில் மீண்டும் மறுபரிசீலமை செய்யப்படும். எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் அவர்களுக்கு குறித்த கொடுப்பனவை வழங்கும் வகையில் விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். வங்கிக் கணக்கை திறக்க முடியாது 67ஆயிரம் குடும்பங்களுக்கு அஸ்வெசும கொடுப்பனவை பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு அடையாள அட்டையின்றி வங்கிக் கணக்கை திறப்பதற்கான அனுமதியை வழங்க மத்திய வழங்கியுடன் நடத்திய கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஒன்றரை வருட நிலுவை தொகையுடன் குறித்த கொடுப்பனவு வழங்கப்படும்.

இதேவேளை, அஸ்வெசும கொடுப்பனவு கிடைக்கப்பெறும் குடும்பங்களில் உள்ள மாணவர்களுக்கு 6ஆயிரம் ரூபா வவுச்சர் ஒன்றை பாடசாலை உபகரணங்களை பெற்றுக்கொள்ள வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஜனவரி முதல் குறித்த வவுச்சர்கள் வழங்கப்படும். அதேபோன்று அஸ்வெசும கொடுப்பனவு கிடைக்காது குறித்த வவுச்சர்களை பெற்றுக்கொள்ள தகுதியுடைய மாணவர்களுக்கு அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.” என்றார்.

## புலமைப்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

*கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.*

*இது தொடர்பான மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இதனை அறிவித்துள்ளது.*







# நிஸாம் காரியப்பர் எம்.பி. சத்தியப் பிரமாணம்



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் உறுப்பினராக அறிவிக்கப்பட்டிருந்த நிசாம் காரியப்பர் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இன்று (18) காலை 9.30 மணியளவில் நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமான நிலையில், சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் நாயகம் ரஞ்சித் மத்தும பண்டாரவின் கையொப்பத்துடன் கூடிய ஐந்து உறுப்பினர்களை கொண்ட தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விபரங்கள் வெளியாகின.

இதன்படி மனோ கணேசன், சுஜீவ சேனசிங்க உள்ளிட்டவர்கள் நேற்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

**(இப்னு தவ்பீக் ஆலீம்)**

### சித்தியடைய வழி

"விசுவாசிகளே நீங்கள் குனிந்து சிரம் பணிந்து உங்கள் இறைவனை வணங்குங்கள். நன்மையே செய்து கொண்டிருங்கள், அதனால் நீங்கள் சித்தியடையலாம்" (22:77)

"(விசுவாசிகளே) நீங்கள் அல்லாஹ்வுடைய பாதையில் முயற்சிக்க வேண்டியவாறு முயற்சியுங்கள். அவனே உங்களைத் தெரிந்தெடுத்(து மேன்மையாக்கி வைத்)திருக்கிறான். இந்த மார்க்கத்தில் அல்லாஹ் உங்களுக்கு யாதொரு கஷ்டத்தையம் ஏற்படுத்தவில்லை.

தொழுகையைக் கடைப்பிடித்தொழுகுங்கள். ஸகாத்தும் கொடுத்து வாருங்கள். அல்லாஹ்வைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அவன்தான் உங்களுடைய இரட்சகன். உதவி செய்கிறவர்களிலும் அவனே மிக்க உயர்ந்தவன்." (22:78)

### வெற்றியின் அடையாளங்கள்

"விசுவாசிகள் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டனர்." (23:01)

"அவர்கள் எத்தகையவர்களென்றால் தம் தொழுகையை மிக்க உள்ளச்சத்தோடு தொழுவார்கள்." (23:2)

"அவர்கள் வீணான காரியங்களிலிருந்து விலகி இருப்பார்கள்." (23.03)

"அவர்கள் ஸக்காத்தும் கொடுத்து வருவார்கள்" (23:04)

"அவர்கள் தங்கள் மர்மஸ்த்தலங்களை (விபச்சாரத்திலிருந்து) காப்பாற்றிக் கொள்வார்கள்." (23:05)

"அன்றி அவர்களை (நம்பி ஒப்படைக்கப்பட்ட) தங்களுடைய அமானிதப் பொருட்களையும் தங்களுடைய வாக்குறுதியையும் பேணி(க்காத்து) நடந்துகொள்வர்" (23:08)

"தங்கள் தொழுகைகளையும் குறித்த காலத்தில் (தவறாது) கடைப்பிடித்தொழுகி வருவார்கள்"(23:09)

"இத்தகையோர்தாம் மெய்யான அனந்தரக்காரர்கள்" (23:10)

"ஆகவே இவர்கள் பிர்தௌஸ் (என்னும் சுவனபதியை) அனந்தரமாகக் கொண்டு அதில் என்றென்றும் தங்கிவிடுவார்கள்" (23:11)

### மெய்யான விசுவாசிகள

"எவர்கள் (பூமியில் விழுந்து சிரம்பணிந்து, தங்கள் இறைவனைப் புகழ்ந்து துதி செய்கின்றார்களோ, அவர்கள் தாம், நம்முடைய வசனங்களை மெய்யாகவே விசுவாசிப்பவர்கள், அவர்கள் கர்வம் கொண்டு பெருமையடிக்கவும் மாட்டார்கள்" (32:15)

"அவர்கள் (இரவில்) படுக்கையிலிருந்து தங்கள் விலாக்களை உயர்த்தி (எழுந்து அப்புறப்பட்டு) தங்கள் இறைவனிடம் நம்பிக்கை வைத்தும், பயந்தும் (அவனைப்) பிரார்த்தனை செய்வார்கள். நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றிலிருந்து அவர்கள் தானமாகச் செலவுசெய்வார்கள்." (32:16)

"எவர்கள் விசுவாசம் கொண்டு நற்கருமங்களைச் செய்கிறார்களோ, அவர்களுக்கு அவர்கள் செய்யும் (நற்)கருமங்களின் காரணமாகச் சுவனபதிகள் தங்குமிடங்களாகி (அதில்) அவர்கள் விருந்தாளியைப் போல் உபசரிக்கப்படுவார்கள்." (32:19)

"எவர்கள் பாவம் செய்கிறார்களோ அவர்களது தங்குமிடம் (நரக) நெருப்புதான். அதிலிருந்து அவர்கள் வெளிப்பட முயற்சிக்கும் போதெல்லாம் அதனுள் இழுத்து விடப்பட்டு, "நீங்கள் பொய்யாக்கிக் கொண்டிருந்த இந்(நரக) நெருப்பின் வேதனையைச் சுவைத்துப் பாருங்கள்" என்று அவர்களுக்குக் கூறப்படும்." (32:20)

### அழகிய முன்மாதிரி

"அல்லாஹ்வையும், இறுதிநாளையும் உறுதியாக நம்புகின்றவர்களுக்குரிய அழகிய முன்மாதிரி நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடமே உங்களுக்கு இருக்கின்றது. அவர்கள் (அவரைப் பின்பற்றி) அல்லாஹ்வை அதிகமாக நினைத்துக் (துதிசெய்து) கொண்டிருப்பார்கள்." (33:21)

"உண்மையாளர்களுக்கு, அவர்களின் உண்மைக்கு(த்தக்க) கூலியை அல்லாஹ் கொடுத்தே தீருவான். அன்றி நயவஞ்சகர்களை அவன் நாடினால் வேதனை செய்வான். அல்லது அவர்களை மன்னிப்பளவில் திருப்பிவிடுவான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்போனும், கிருபையுடையோனுமாக இருக்கின்றான்." (33:24)

# தெவட்டகஹ பள்ளிவாசலுக்கு வருகை தந்த மத விவகார அமைச்சர்

**(பீ.எம்.முக்தார்)**

புத்தசாசன,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் சினிதும சுனில் செனவி கொழும்பு 7, தெவட்டகஹ செய்ஹ்க் உதுமான் வலியுல்லாஹ் தர்கா பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார்.

அமைச்சரை பள்ளிவாசல் மற்றும் செய்ஹ் உஸ்மான் வலியுல்லாஹ் (ரஹ்) ஸியாரம் ஆகியவற்றின் தலைவர் அல்-ஹாஜ் றியாஸ் ஸாலி வரவேற்றார்.

துஆப் பிரார்த்தனை இடம்பெற்றதுடன் பின்னர் அமைச்சருக்கு தலைவர் றியாஸ் ஸாலி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். சங்கைக்குரிய ஹலீபதுஷ்ஷ ாதுலி மௌலவி அஸ்ஸெய்யித் அலவி ஸாலிஹ் மௌலானா (முர்ஸி) உட்பட பலரும் இதன் போது சமூகமளித்திருந்தனர்.



## சாதாரண..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

திணைக்களம் இன்று (18) பிற்பகல் அறிவித்துள்ளது.

இவ்வருடத்திற்கான சாதாரணத் தரப்பரீட்சை 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் எச். ஜே. எம். சி. அமித் ஜெயசுந்தர தெரிவித்தார்.

## வாகன..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

இறக்குமதிக்கான வர்த்தமானி வெளியாகியுள்ளது.

டிசம்பர் 14 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ள இவ் வர்த்தமானியின் பிரகாரம் பெப்ரவரி முதலாம் திகதி முதல் தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வாகன இறக்குமதி மூன்று வகைகளில் மேற்கொள்ளப்படுமென்றும் இதனால் டொலர் நெருக்கடி ஏற்பட வாய்ப்பில்லையென்றும் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க இன்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

## குற்றங்கள்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

(18) நாடாளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சர் வசந்த சமரசிங்கவினால் (Wasantha Samarasinghe) எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில்எனினும், அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டால் நாடாளுமன்ற பதவியில் இருந்து விலகுகிறேன். எனினும், அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டால் நாடாளுமன்ற பதவியில் இருந்து விலகுகிறேன்.

மேலும், அது பொய்யென்றால் உங்கள் தரப்பில் இருந்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் அவர்களின் பதவிகளில் இருந்து விலகுவார்களா?"" என கேள்வி எழுப்பியுள்ளார்.




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 DECEMBER 18 - WEDNESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# போலி பட்டங்களுக்கெதிராக சட்டம் பாய வேண்டும்

போலிச் சான்றிதழ்கள் மற்றும் போலிப் பட்டங்கள் நாட்டில் இன்று பேசுபொருளாக மாறி உள்ளது. பாராளுமன்றத்தில் சபாநாயகராக பணிபுரிந்த அசோக சபுமல் ரன்வெல்ல 22 நாட்களில் தனது சபாநாயகர் பதவியை துறக்கும் அளவுக்கு தனது பெயரின் முன்னால் இருந்த கலாநிதி பட்டம் காரணமாக அமைந்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கு அவசியமற்ற கலாநிதி பட்டத்தை தன் பெயருக்கு முன்னால் பயன்படுத்தியதன் காரணமாக முன்னால் சபாநாயகர் ரன்வெல்ல பதவியில் இருந்து ராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸ ாநாயக்க விடுத்த பணிப்புரையின் அடுத்தே அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். இந்த விடயத்தில் ஜனாதிபதி காட்டியுள்ள முன்மாதிரி பாராட்டத்தக்கது.

கடந்த அரசாங்கத்தின் போது மனித உயிர்களுடன் விளையாடும் போலி மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு காரணமாக இருந்த முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல வுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் சமர்ப்பித்த நம்பிக்கை பிரேரணைக்கு அரசு தரப்பில் முழுமையாக எதிர்த்து வாக்களித்து கெஹெலிய வை பாதுகாத்தமையை எவரும் இலகுவில் மறக்க முடியாது.

அண்மைக்காலமாக நாட்டில் பட்டம் வழங்குதல் ஒரு சாதாரண நிகழ்வாக மாறி இருக்கிறது. பல்கலைகழகங்களில் கலாநிதி பட்டம் பெறுவோர் ஆராய்ச்சிகளை நடத்தி பல வருடங்கள் சிரமப்பட்டே கலாநிதி பட்டங்களை பெறுவர்.

கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களாக கலாநிதி பட்டம் வழங்குவது ஒரு சாதாரண நிகழ்வாக மாறி இருந்தது. சிலர் பணம் சம்பாதிப்பதற்கான ஒரு வழியாக இதனை கையாண்டு வருகின்றனர்.

தேசத்துக்கு அளப்பரிய சேவை புரிந்தவர்களுக்கு தேசமானிய, தேசபந்து, கலாகீர்த்தி போன்ற பல்வகையான பட்டங்களை அரசு வருடா வருடம் சுதந்திர தினத்தன்று வழங்கி வருகிறது.

இப்போது அரசுக்கு சவாலாக பல தனியார் அமைப்புகள் பட்டங்களை ஏலத்தில் விற்பது போல் வழங்கி வருவதனை காணலாம்.

இதன் ஒரே நோக்கம் சம்பாதிப்பதேயன்றி வேறில்லை. மாறி மாறி வந்த அரசாங்கங்களும் இந்த சட்ட விரோத செயற்பாடுகளை நிறுத்துவதற்கு எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறியதன் காரணமாக நாட்டின் போலி பட்டங்களை வைத்திருப்போரது எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது.

அசோக சபுமல் ரன்வெல்ல வின் விவகாரம் இப்படியான சட்ட விரோத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய கட்டாயத்தினை வலியுறுத்தி சுட்டிக்காட்டுகிறது.

அரசு இதனை பாரதூரமான விடயமாக கருதி அதை தடுத்து நிறுத்துவதற்கான சட்டங்களை கொண்டு வந்து இவ்வாறு நாட்டில் போலி பட்டங்களை வழங்குவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

## போலியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது கல்வித் தகுதிகளை முன்வைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு.

நான் எனது எந்தவொரு சுயவிபரக் கோவையிலும் நான் பெற்றிராத எந்த தகுதியையும் குறிப்பிட்டில்லை. சகல விடங்களையும் வெளிப்படைத்தன்மையுடன் முன்வைத்துள்ளேன். இது தொடர்பில் உரிய நிறுவனங்களிடம் கேட்டறிந்தால் உண்மை மற்றும் பொய்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். நான் கூறும் மற்றும் முன்வைக்கும் சகலதுக்கும் நான் பொறுப்புக் கூறுவேன். நான் போலியான கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்ததுள்ளேன் என எங்காவது நிரூபிக்கப்பட்டால், எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவி, எதிர்க்கட்சித் தலைவர் பதவி போலவே அரசியலில் இருந்தும் விலகுவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களது கல்வித் தகைமைகளுக்கு சவால் விடுத்து அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் முகமாகவும், தான் சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறவில்லை என பல்வேறு தரப்பினரும் சமூக வலைதளங்கள் மூலம் மேற்கொண்டு வரும் பொய்ப் பிரச்சாரம் மற்றும் தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் முகமாக முன்னெடுக்கப்படும் சேறுபூசும் நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் முகமாக இன்று (18) சபையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நான் எனது ஆரம்ப பாலர் பாடசாலைக் கல்வியை St Bridget's Convent - Primary School இல் இருந்து ஆரம்பித்தேன். 1-5 ஆம் வகுப்பு வரை சென் தோமஸ் ஆரம்ப கல்லூ ரியில் கற்றேன். 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை கொழும்பு ரோயல் கல்லூரிக்கு சென்றேன். நான் இந்நாட்டில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவில்லை. கல்லூரி விடுகைப் பத்திர சான்றிதழ் கூட என்னிடமுள்ளது. நான் கனிஷ்ட மாணவர் பிரிவின் மாணவத்தலைவராக இருந்தேன். கிரிக்கெட் வீரராகவும் இருந்தேன். இதற்கான சான்றிதழ்கள் சகலதையும் நான் இன்று இவ்வாறு இந்த சபையில் சமர்ப்பிக்கின்றேன்.

இதன் பிறகு, இங்கிலாந்தில் உள்ள மில்ஹில் கல்லூரியில்(Mill Hill School) கல்வி கற்றேன். 1983 மற்றும் 1984 இல் சாதாரண தரப் பரீட்டைக்கு தோற்றினேன். சாதாரண தரப் பரீட்டையில் சித்தியடைவில்லையெனவும், 9று பெற்றதாகவும் பொய்ப் பிரச்சாரம் செய்தனர். அச்சமயத்தில் று என்ற தரம் இருக்கவில்லை. யு தரமும் ட தரமுமே காணப்பட்டன. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையவில்லை என்று பொய்யை பரப்புபவர்கள் நான் சமர்ப்பிக்கும் இந்த சான்றிதழ்களை சரிபார்த்துக் கொள்ள முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மில்ஹில் கல்லூரியில் கல்வி பயிலும் போது 1984 இல் ஹவுஸ் லீடர், 1985 கல்லூரி மாணவத் தலைவராகவும் இருந்திருக்கிறேன். 1986 வரை கிரிக்கெட் விளையாடி, 1985 இல் கிரிக்கெட் அணியின் செயலாளராகவும், 1986 கிரிக்கெட் அணியின் கேப்டனாகவும் இருந்திருக்கிறேன். இவற்றுக்கான சான்றாதாரங்கள் என்னிடம் உள்ளன. 1986 ஆம் ஆண்டில் உயர் தரப்பரீட்சையில் 3 இல் 2 அதாவது அரசறிவியல் பாடம் மற்றும் வணிகப் பாடம் ஆகியவற்றில் கல்லூரி பரிசில்களையும் பெற்றுள்ளேன். உயர் தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்களையும் சபையில் சமர்ப்பிக்கிறேன். இதன் பிரகாரம் உயர் தரப் பரீட்சையில் 2 B சித்திகளும் 1 C சித்தியும் எனக்கு இருக்கிறது. இந்த பெறுபேறுகளின் அடிப்படையில், நான் எனது பட்டப்படிப்பைத் தொடர லண்டன் பல்கலைக்கழகத்திற்குச் (London School of Economics and Political Science) சென்றேன். 1991 ஆம் ஆண்டு நான் எனது பட்டதாரி சான்றிதழ் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

London School of Economics and Political Science எனும் பல்கலைக்கழகத்தில் இருந்து எனக்கு வழங்கப்பட்ட கடிதங்களும் பட்டச் சான்றிதழ்களும் என்னிடமுள்ளன.

இதன் பிறகு, அமெரிக்காவில் உள்ள The University of Maryland, College Park இல் Public Management துறையில் முதுகலைமாணி கற்கையை தொடரச் சென்றேன். இங்கு 1991 மற்றும் 1992 ஆம் ஆண்டுகளில் 8 பாடங்களில், 6 A தர சித்திகளையும் 2 பாடங்களில் B தர சித்திகளையும் பெற்றேன். இந்த கல்விச் சான்றிதழ்களையும் இவ்வாறு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

1993 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி எனது தந்தையின் மரணத்திற்குப் பின்னர் மீண்டும் இலங்கைக்கு வந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டேன்.

அமெரிக்காவில் முதுகலைமாணி கற்கையை பயிலும் போது அமெரிக்க செனட் சபை உறுப்பினராக பதவி வகித்த Larry Fraser என்ற நபரிடம் 2 ஆண்டுகளாக தன்னார்வலராக பணியாற்றினேன். இதற்கான சான்றிதழ்களும் என்னிடம் இருக்கின்றன என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இதன் பின்னர், 2021 மற்றும் 2022 காலப்பகுதியில் திறந்த பல்கலைக்கழகத்திற்குச் சென்றேன். இதில் சேர்ந்தமைக்கான அடிதளத்தை அங்கு விரிவுரையாளராக இருந்த பிரதமருக்கும் தெரியும். திறந்த பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல் அறிவியலில் முதுகலைப் பட்டம் பெற்றேன். இங்கு பிரதமர் நடத்திய வகுப்புக்களிலும் கலந்து கொண்டேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.



# ஹபரணையில் சுற்றுலா மையம் திறப்பு





(எம்.ரீ.ஆரிப்)

வடமத்திய மாகாணத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில் கொரியா சுற்றுலா அமைச்சினால் 500 மில்லியன் ஷரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சுற்றுலா சேவை மையம் மற்றும் சுற்றுலா வரவேற்பு நிலையம் எண்பணவைகளை வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச மற்றும் கொரியா பிரதி உயர்ஸ்தானிகர் ஜூன் சோனி ஆகியோரினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கொரியா குடியரசுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில-ான நீண்டகால நட்புறவு மற்றும் ஒத்து ழைப்பின் அடையாளமாக இந்த சுற்றுலா சேவை மையம் கொரியா அரசாங்கத்தினால் சமூக அடிப்படை யிலான பகுதியான ஹபரண பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ளது இதன்போது கொரியா சுற்றுலா அமைப்பின் அதிகாரிகள் சுற்றுலா அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எல்.நசீர் சுற்றுலா அமைப்பின் தலைவர் புத்திக ஹேவாவசம் வடமத்திய மாகாண சுற்றுலா பணிப்பாளர் தில்ருக் ரத்னாயக்க மற்றும் சுற்றுலா சபை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மலேசிய சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்ற அஷ்ஷெய்ஹ். அரபாத் கரீம் (நளீமி)

(பீ. எம் முக்தார்)

பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்தவரும், பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷ்ஷெய்ஹ். அரபாத் கரீம் (நளீமி) மலேசிய சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய சட்டத்துறையில் கலாநிதி பட்டம் பெற்றுள்ளார். மலேசியாவில் அண்மையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலாநிதி பட்டத்திற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.

1982 ஆம் ஆண்டு பேருவளை சீனன்கோட்டையில் அல்-ஹாஜ் முஹம்மத் ஜிப்ரி மர்ஹூமா ஸித்தி நளீரா தம்பதிகளுக்கு புதல்வராக பிறந்த இவர் அல்ஹூமைஸரா தேசிய பாடசாலையில் கல்வியை தொடர்ந்து பின்னர் ஜாமியா நளீமிய்யா கலாபீடத்திற்கு பரீட்சையில் தெரிவாகி அங்கு கல்வி கற்று பட்டதாரியானார்.

அதனைத் தொடர்ந்து, பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமானிப் பட்டம் பெற்றார். பின்னர், முதுகலைமானிப் பட்டத்தை 2015 ஆம் ஆண்டு மலேசிய சர்வதேச இஸ்லாமிய சட்டத்துறையில் கலாநிதி பட்டம் பெற்றார்.

இவர் 10இற்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அத்தோடு ஆய்வுக் கட்டுரைகளை சர்வதேச ஆய்வு சஞ்சிகைகளில் பிரசுரித்துள்ளார். மேலும் சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜாமியா நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றும் இவர் சீனன் கோட்டை பவுன்டேஷனின் தலைவர் பதவி வகிப்பதோடு, பேருவளை பிராந்திய எழுத்தாளர் ஒன்றியத்திலும் முக்கிய பதவி வகிக்கின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## வருடாந்தம் மார்ச் மாதம் கண்டி சுற்றுலா மாதமாக்க முன்மொழிவு

(ரஷீத் எம். றியாழ்)

அதிகளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கண்டிக்கு வரவழைக்கும் வகையில், வருடாந்தம் மார்ச் மாதத்தை கண்டி சுற்றுலா மாதமாக பிரகடனப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளதாக மத்திய மாகாண பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் ஆனந்த ஸ்டீவன் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கண்டி மாநகரில் உள்ள மத மற்றும் கலாசார உறவுகள் காரணமாக



சுற்றுலாப் பயணிகளை கவரும் சில செயற்பாடுகளை நகருக்குள் அறிமுகப்படுத்த முடியாது எனவும் கண்டியை அடுத்துள்ள திகன நகரத்தை சுற்றுலா வலயமாகப் பிரகடனப்படுத்துவதற்கும் பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

## மாவட்ட இலக்கிய போட்டியில் கற்பிட்டி டில்ஷா முதலாம் இடம்

(எம்.எச்.எம்.சியாஜ்,
எம்.யூ.எம்.சனூன்)

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் புத்தளம் மாவட்ட செயலகம் இணைந்து நடாத்திய மாவட்ட இலக்கியப் போட்டித் தொடரில் சிறுகதை ஆக்க போட்டியில் "கோடை மழை" எனும் தலைப்பில் சிறுகதையை எழுதிய கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவி



எம்.ஜே.பாத்திமா டில்ஷா அதி சிரேஷ்ட பிரிவில் முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டார்.

மேலும் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கற்பிட்டி பிரதேச செயலகம் இணைந்து நடாத்திய பிரதேச இலக்கியப் போட்டித் தொடரிலும் சிறுகதை ஆக்க போட்டியில் முதலாம் இடத்தினையும் கல்வியின் சிறப்பு எனும் கவிதை போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ள இவர் கற்பிட்டியைச் சேர்ந்த யூ.எம் ஜனாப் மற்றும் எம்.டீ.சரீபா ஆகியோரின் மூத்த புதல்வியாவார்.

## இலங்கை இனப்பிரச்சினையும் முஸ்லிம்களுக்கான தீர்வும்

### ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் கட்சி நடாத்தும் கட்டுரைப்போட்டி

முதல் பரிசு பெறும் கட்டுரை ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் பிரசுரமாக புத்தக வடிவில் வெளியிடப்படும்.

கட்டுரைகள் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமல் நான்கு பக்கங்களுக்கு குறையாமல் கனணியில் டைப் செய்யப்பட்டு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டு அதன் சொப்ட் கொப்பி ஈ- மெயில் பண்ணப்பட வேண்டும். வேண்டும்.

தலைப்பு: "இலங்கை இனப்பிரச்சினையும் முஸ்லிம்களுக்கான தீர்வும்"

**முதல் பரிசு:** 25000 ரூபா.
**இரண்டாம் பரிசு :** 20000
**மூன்றாம் பரிசு:** 10000.
5000 பெறுமதியான ஐந்து ஆறுதல் பரிசுகள்.

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய இறுதித்திகதி: 2025 பெப்ரவரி 10ஆம் திகதி.

**அனுப்ப வேண்டிய முகவரி**
"ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ்"
226, பள்ளி வீதி, கல்முனை 8
aljazeerallanka@gmail.com

## பேருவளை அப்ரார் கல்வி நிலைய ஏற்பாட்டில் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு

(பேருவளை பீ.எம் முக்தார்)








பேருவளை பிரதேசத்திலுள்ள 06 முஸ்லிம், சிங்கள பாடசாலைகளில் கல்வி பயிலும் குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு தமது கல்வியை இடையூறுன்றி தொடர புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு 16ஆம் திகதி திங்கட்கிழமை (2024-12-16) மாலை பேருவளை மருதானை அல்-பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

பேருவளை அப்ரார் கல்வி நிலையம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

அப்ரார் கல்வி நிலைய ஸ்தாபகரும், முன்னாள் அமைச்சருமான அல்-ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு தலைவர் அல்-ஹாஜ் முஹம்மத் நிஸாம் (ஜே.பி) தலைமை வகித்தார்.

பாகிஸ்தான் நாட்டின் இலங்கை உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) பஹீமும் அஸீஸ் பிரதம அதிதியாகவும், கட்டார் செரட்டி இலங்கை பணிப்பாளர் முஹம்மத் அபூ கலீபா கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர். மேற்படி, கல்வி நிலைய செயலாளர் கலாநிதி. மௌலவி எம் அஸ்வர் அஸாஹிம் (அல்-அஸ்ஹரி) வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில், பேருவளை மருதானை அல்-பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம், பாஸியத்துல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலை, மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயம், மஹகொடை ஐ.எல்.எம் ஸம்ஸூதீன் மகா வித்தியாலயம், மஸ்ஸல பௌத்த கனிஷ்ட வித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகளில் கல்வி பயிலும் 50 வறிய மாணவர்களுக்கு இதன் போது புலமைப்பரிசில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர், அப்ரார் கல்வி நிலையத்தின் பணிகளை பாராட்டி நினைவுச்சின்னமொன்றையும் வழங்கினார்.

அல்-பாஸியத்துல் நஸ்ரியா பாடசாலை பழைய மாணவியும் தற்போது அரசாங்க நிர்வாக சேவையில் உயர் பதவி வகித்து மருதானை மண்ணுக்கு புகழ் சேர்த்துள்ள பாத்திமா சப்ரா ராஜிக்கும் அப்ரார் கல்வி நிலையத்தின் மூலம் நிறைவுச் சின்னமொன்றும் வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பாகிஸ்தானுக்கும், இலங்கைக்கும் இடையிலான நீண்ட கால நெருக்கமான உறவுகளை பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் தமது உரையில் ஞாபக மூட்டினார்.

அதிபர் மஸ்னவியா புர்கான் உரையாற்றும் போது இலங்கையில் முதலாவது முஸ்லிம் மகளிர் கல்லூரியான இப்பாடசாலை தனது நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதாகவும், பாடசாலையில் பல்வேறு குறைபாடுகள் நிகழ்வி வருவதாகவும் சுட்டிக்காட்டினார். இப்பாடசாலை முனேற்றத்தில், முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் காட்டி வரும் ஆர்வம் குறித்தும் நன்றி தெரிவித்தார். நிகழ்வில் விஷேட அதிதிகளாக தொழிலதிபர் அல்-ஹாஜ் எம். ஆர் மொஹிதீன் ஏ. காதர் (Trustee Muslim Hand), எம்.ஆர் அஸாமர் முஹம்மத் மிஹ்லார் (Country Director Muslim Hand to Sri Lanka), எம்.ஆர் ஆஸிப் மஹ்மூத் (Heqd of Programmes, Muslim Hand), நாதியா ரஸா (Scholorship Programme Lead - UK) ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், பேருவளை நகரசபை முன்னாள் உப தலைவர் அல்-ஹாஜ் ஹஸன் பாஸி, இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் புதல்வர் பாதில் பாக்கீர் மாக்கார், கல்வி நிலைய பொருளாளர் ஹலீம் ஏ. அஸீஸ், பாடசாலைகளினதும் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், உலமாக்கள், கல்விமான்கள், பாடசாலை சங்க உறுப்பினர்கள், அப்ரார் கல்வி நிலைய முக்கியஸ்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# புதிய சபாநாயகருக்கு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் சபையில் வாழ்த்து!



10ஆவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ள வைத்தியகலாநிதி ஜகத் விக்கிரமரத்னவுக்கு, ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிஷாட் பதியுதீன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் (17) புதிய சபாநாயகருக்கு சபையில் வாழ்த்து தெரிவித்து, உரையாற்றிய அவர் கூறியதாவது,

“புதிய சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள உங்களுக்கு எனது வாழ்த்துக்கள் அதேபோன்று, எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பெரும்பான்மையைக் கொண்டுள்ள ஒரு அரசாங்கத்தின் சபாநாயகராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறீர்கள்.

ஒரு குறுகிய காலத்துக்குள் இரண்டாவது சபாநாயகராக பாராளுமன்றத்தில் தெரிவாகியுள்ள நீங்கள், ஒரு வைத்தியராகவும் இருக்கின்றீர்கள்.

எனவே, சகல கட்சிகளையும், அனைத்து உறுப்பினர்களையும் சமமாக மதித்து, அனைவரினதும் உரிமைகளைப் பாதுகாத்து, நேர்மையாகச் செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கையோடு, உங்களை வாழ்த்தி விடைபெறுகின்றேன். நன்றி” என்று குறிப்பிட்டுள்ளார்.

# அமானா வங்கியின் 9 மாத நிதிப் பெறுபேறு 26% ஆல் உயர்வு



அமானா வங்கி, 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்த 9 மாத காலப்பகுதியில், ரூ. 1.98 பில்லியன் வரிக்கு முந்திய இலாபத்துடன் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ. 1.68 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 18% வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. வங்கியின் வரிக்கு பிந்திய இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 26மூ வளர்ச்சியை பதிவு செய்து ரூ. 1 பில்லியனை கடந்து, ரூ. 1.12 பில்லியனாக பதிவாகியிருந்தது. இந்தப் பெறுமதி முன்னயை ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ. 891 மில்லியனாக பதிவாகியிருந்தது.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், வங்கியியல் துறையில் நிதியளிப்பு வீதங்கள் வீழ்ச்சியடையும் நிலையில், வங்கியின் நிதியளிப்பு வருமானம் ரூ. 11.70 பில்லியனாக காணப்பட்டது. எவ்வாறாயினும், 4.1% எனும் உறுதியான நிதியளிப்பு எல்லைப் பெறுமதியை வங்கி பேணியிருந்ததுடன், தேறிய நிதியளிப்பு வருமான வளர்ச்சியாக 6% ஐ பதிவு செய்து ரூ. 5.13 பில்லியனை எய்தியிருந்தது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் இப்பெறுமதி ரூ. 4.85 பில்லியனாக காணப்பட்டது.

வங்கியின் மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூ. 6.50 பில்லியனாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தப் பெறுமதி 4மூ இனால் எல்லையளவில் வீழ்ச்சியடைந்திருந்தது. துரித மீட்சி பொறிமுறை அமுலில் இருந்ததுடன், புதுப்பிக்கப்பட்ட வாடிக்கையாளர் ஈடுபாட்டுடன், வங்கியினால் மதிப்பிறக்க கட்டணங்களை 73% இனால் குறைத்துக் கொள்ள முடிந்திருந்தது. மேலும், இது தேறிய தொழிற்பாட்டு வருமானம் ஒப்பீட்டளவில் 16மூஇனால் அதிகரித்து ரூ. 6.11 பில்லியனாக பதிவாகியிருந்தமைக்கு பங்களிப்புச் செய்திருந்தது. தொழிற்பாட்டு செலவீனங்களில் அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், வங்கி ஆரோக்கியமான வருமானத்தின் மீதான செலவு விகிதத்தை 53% ஆக பேணியிருந்தது. நிதிச் சேவைகள் மீது பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு முன்னரான தொழிற்படு இலாபம் ஒப்பீட்டளவில் 6% வளர்ச்சியை பதிந்து, ரூ. 2.69 பில்லியனை எய்தியிருந்தது. வங்கியின் திரண்ட வரிப் பங்களிப்பு சுமார் ரூ. 1.57 பில்லியனாக காணப்பட்டதுடன், வங்கியின் வரிக்கு முந்திய மொத்த தொழிற்படு இலாபத்தில் 58% பங்கை கொண்டிருந்தது. இக்காலப்பகுதியில் மொத்த பரந்த வருமானம் ரூ. 1.10 பில்லியனாகும். இது ஒப்பீட்டளவில் 24மூ வளர்ச்சியை காண்பித்திருந்தது.

வட்டிசாராத வங்கியியல் மாதிரிக்கான கேள்வி அதிகரித்திருந்ததை தொடர்ந்து, வங்கியின் முற்பணங்கள் மற்றும் வைப்புகள் பிரிவு 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்த 9 மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை பதிவு செய்திருந்தன. அபிவிருத்தியில் கவனம் செலுத்தும் வங்கியியல் வழிமுறையை ஊக்குவித்து, வாடிக்கையாளர் முற்பணங்கள் 16மூ இனால் அதிகரித்து ரூ. 15 பில்லியனால் உயர்ந்து ரூ. 104.42 பில்லியனை எய்தியிருந்தது.

அத்துடன் தொழிற்துறையின் குறைந்த நிலை 3 மதிப்பிறக்க விகிதமான 1.4% ஐ பேணியிருந்தது. ஆரோக்கியமான 9 மாத கால வளர்ச்சியை பதிவு செய்து, வங்கியின் வாடிக்கையாளர் வைப்புகள், மூன்றாம் காலாண்டில் ரூ. 145.72 பில்லியனாக காணப்பட்டது. உறுதியான ஊயுளுயு விகிதமான 42.3% ஐ பேணியிருந்ததுடன், தொழிற்துறையில் முன்மாதிரியானதாக திகழ்ந்தது. வங்கியின் மொத்த சொத்துகள் ரூ. 172.52 பில்லியனாக காணப்பட்டதுடன், பங்கொன்றின் மீதான தேறிய சொத்துப் பெறுமதி ரூ. 41.40 ஆக முன்னேறியிருந்தது. முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் பதிவாகியிருந்த சிறந்த பெறுபேறுகளினூடாக, வங்கியின் சுழுநு மற்றும் சுழுயு ஆகியன முறையே 6.7% மற்றும் 1.6% ஆக காணப்பட்டன. 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதியன்று, அமானா வங்கியின் பொது பங்கு நிலை 1 மற்றும் மொத்த மூலதன விகிதங்கள் போன்றன முறையே 15.5% மற்றும் 18.1% ஆக காணப்பட்டன. இவை ஆகக்குறைந்த ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடான 7% மற்றும் 12.5% என்பதை விட உயர்வாகும்.

# சர்வதேச மனக் கணிதப் போட்டியில் திஹாரிய UCMAS மாணவர்கள் சாதனை




2024ஆம் ஆண்டுக்கான மாபெரும் சர்வதேச மனக் கணிதப் போட்டியில் திஹாரிய யுசிமாஸ் நிலைய மாணவர் அணி சாதனை படைத்துள்ளது.

இந்தியாவின் தலைநகர் புது டில்லியில் குறித்த சர்வதேச மனக் கணிதப் போட்டி இம்மாதம் 14ஆம் திகதி டில்லி பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் உலகளாவிய ரீதியில் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து சுமார் 6,000 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இதில், இலங்கையை பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில்103 மாணவர்கள் சென்றிருந்ததோடு, முதல் தடவையாக திஹாரிய யுசிமாஸ் நிலையத்திலிருந்து 4 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். இதில் CAT Z (Basic) பிரிவில் ரிஷாதா ரிம்ஸான் செம்பியன் கிண்ணத்தையும், CAT Z (Basic) பிரிவில் ரீனா ரிஸ்மி செம்பியன் கிண்ணத்தையும், CAT A (Elementary A) பிரிவில் நுஹா ஜலால்தீன் முதலாம் இடத்தையும் (1st Runner up), CAT B ( Elementary B) பிரிவில் அக்லா பௌஸூல் ஹமீட் முதலாம் இடத்தையும் (1st Runner up) பெற்று வெற்றி வாகை சூடினர். மேலும் மேற்படி மாணவர்கள் 10.08.2024 ஆம் திகதி கொழும்பு சுகத்ததாச உள்ளக அரங்கில் தேசிய ரீதியில் இடம்பெற்ற மனக்கணிதப் போட்டியின் அதிசிறந்த வெற்றியாளர்களுமாவர்.

பயிற்றுவிப்பாளர்களின் மாதக்கணக்கான அர்ப்பணிப்பும், அனுபவமும், பெற்றோர்களின் பாரிய ஆதரவும் இம்மாணவர்களின் வெற்றிக்கு வழிவகுத்துள்ளது.

30 இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்குபற்றிய சர்வதேச மனக் கணிதப் போட்டியில் திஹாரிய மண்ணின் மாணவர்கள் வெற்றி வாகைசூடி நாட்டுக்கும் நம் மண்ணுக்கும் பெருமை சேர்த்தமைக்கு வாழ்த்துகின்றோம் என்று IMECS மற்றும் யுசிமாஸ் திஹாரிய நிலையத்தின் பணிப்பாளர், பிரதம பயிற்சியாளர் மற்றும் பொறியியலாளர் திரு. பௌஸூல் ஹமீட் அவர்கள் தெரிவித்தார்.

# இக்ரா பாலர் பாடசாலையின் கலைவிழா நிகழ்வுகள்



கஹட்டோவிட்ட இக்ரா பாலர் பாடசாலையின் கலைவிழா நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை (14) அன்று திவானி மண்டப வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பாலர் பாடசாலையின் பிரதம ஆசிரியர் திருமதி ருமைஸா அவர்களின் வழிகாட்டலில் நடைபெற்ற இக்கலைவிழாவில் இக்ரா பாலர் பாடசாலையின் அனைத்து மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

ஆடல், பாடல், ஓதுதல், நாடகம், போன்ற மாணவர்களின் வெளிக்கள செயற்பாடுகளுடன் ஆளுமை விருத்திச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

கலை நிகழ்ச்சிகளின் இறுதியில் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொத்துவில் பகுதிக்கு முஸ்லிம் தரும நம்பிக்கை நிதியிலிருந்து பத்து இலட்சம் நிதி ஒதுக்கீடு




வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொத்துவில் பகுதிக்கு முஸ்லிம் தரும நம்பிக்கை நிதியிலிருந்து (MCF) ரூபா பத்து இலட்சம் நிதி ஒதுக்கீடு.

இலங்கை முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை வக்பு சபையினால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொத்துவில் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக ஒரு மில்லியன் ரூபாவை முஸ்லிம் தரும நம்பிக்கை நிதியிலிருந்து (ஆஊகு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் கோரிக்கைக்கு அமைய இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜனாப். எம்.எஸ்.எம். நவாஸ் அவர்கள் ஒதுக்கப்பட்ட நிதிக்கான காசோலையை வியாழனன்று (12) முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் வைத்து கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் ஜனாப். ரிஸான் ஹுசைன் அவர்களிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், உதவிப் பணிப்பாளர் ஜனாப். எம்.எஸ். அலா அஹ்மத், வக்பு பிரிவு பொறுப்பாளர் ஏ.எஸ்.எம். ஜாவித், வக்பு நியாய சபை செயலாளர் (பதில்) எம்.என். எம். ரோஸன், அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்களின் பொறுப்பதிகாரி எம்.ஐ.எம். முனீர், கொழும்பு மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம். மஸீன், மற்றும் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் ரிஸான் ஹுசைன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பயங்கரவாத நிலமாக மாறும் சிரியா...

# விடிவும், விடியலும் எப்போது பிறக்கும்?





எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

சிரியாவின் மக்கள் தொகையில் 74% சன்னி இஸ்லாமை பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள். ஆனால் ஆட்சி அதிகாரத்தில் இருக்கக்கூடிய அசாத்தின் குடும்பம் சியாவின் உட்பிரிவான அலவீத்தர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களும் 10% அளவிற்கு சிரியாவில் வாழும் நிலையில் அசாத்தின் ஆட்சி காலத்தில் பெரும்பான்மை சன்னி இஸ்லாமிய மக்கள் தங்களுடைய உரிமையை இழப்பதாக கருதினர். இதன் காரணமாகவே மக்கள் அமைதியான முறையில் போராட முயல அதிபர் அசாத் அதை வன்முறையால் அடக்கினார். இதனால் 2011 ஆம் ஆண்டு சிரிய உள்நாட்டு போர் தொடங்கியது.

துருக்கி ஆதரவு, ஈரான் ஆதரவு, ஈராக் ஆதரவு, இஸ்ரேல் ஆதரவு, ரஷ்ய ஆதரவு, அமெரிக்க ஆதரவு என பல்வேறு ஆதரவு போராளி குழுக்கள் ஆங்காங்கே உருவாகி தனித்தனி பகுதிகளை தங்களுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வந்து ஆயுத ஆட்சி நடத்தி வந்தன. 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு மிகப்பெரிய அளவில் காலூன்றி ஆளும் அசாத் அரசுக்கு சிம்ம சொற்பனமாக விளங்கியது. 2019 ஆம் ஆண்டு அதன் தலைவர் கொல்லப்பட்ட பிறகு ஐ. எஸ்.ஐ. எஸ் அமைப்பு ஒழிக்கப்பட்டாலும், பதினைந்துக்கும் மேற்பட்ட போராளி அமைப்புகள் சிரியாவை ஆட்சி செய்தன. மிகப்பெரிய அளவிலான அசாத்தின் சிரிய ராணுவம், சிரிய நிலப்பரப்பின் 60 சதவீத பகுதியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இந்நிலையில் இஸ்ரேல் ஹமாஸ் போர் தொடங்கிய காலகட்டத்தில் இருந்து, அதன் தாக்கம் மத்திய கிழக்கு ஆசிய நாடுகளான லெபனான், சிரியா, ஈரான் உள்ளிட்ட நாடுகளிலும் எதிரொலித்தது.

இந்நிலையில் அல்கொய்தா அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்த அபு முகமது அல்-ஜுலானி அந்த அமைப்பில் இருந்து 2017 ஆம் ஆண்டு பிரிந்து ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் (Hay'at Tahrir al-Sham - HTS) என்ற அமைப்பின் தளபதியானார். இவர் சிரியாவின் உள்நாட்டுப் போரின் போது மிகவும் பிரபலமான இஸ்லாமிய புரட்சி இயக்கத்தின் தலைவராக வெளிப்பட்டார். உவுளு தற்போது சிரியாவில் அடிப்படைவாத இஸ்லாமிய இயக்கமாக செயல்பட்டு வருகிறது, குறிப்பாக இட்லிப் பகுதியில் பலமாக உள்ளது.

சிரியாவில் அதிபர் பஷர் அல் அசத்தின் ஆட்சி மிகவும் வெறுமையானதாகவும், ஊழல் நிறைந்ததாகவும், மோசமானதாகவும் இருந்தது.

ஆனால் இந்த ஆட்சி இந்தளவுக்கு உடனடியாக வீழ்ச்சி அடையும் என்று யாரும் இதுவரை எதிர் பார்க்காத நிலையில் நாட்டின் அதிபர் பஷர் அல் ஆஷாத் தனது உயிர் பாதுகாப்பு கருதி உடனடியாக ரஷ்யாவில் அடைக்கலம் கேட்டு அங்கு தஞ்சம் புகுந்தார் என்பது தான் முக்கியம் பேசும் பொருளாக மாறி வருவதைக் காண கூடியதாக இருக்கிறது.2011-ஆம் ஆண்டு "அரபு வசந்தம்" எழுச்சி கண்டது, அப்போது நிலை வேறு. துனிசியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் அதிபர்களை பதவியில் இருந்து அகற்றிய இந்த புரட்சியில்லைதாங்களும் ஈடுபட சிரியா மக்கள் முயன்றனர்.

2000-ஆம் ஆண்டு தனது தந்தை ஹபீஸ் அல் அசத் இறந்தபிறகு, பஷர் அதிபரானார். 2011-ஆம் ஆண்டு அளவில் பஷரின் ஆட்சி முற்றிலும் ஊழல் நிறைந்ததாக, சீரற்றதாக மாறியது.

ஹபீஸ் அல் அசத் கட்டியெழுப்பிய அமைப்பு மிருகத்தனமான, இரக்கமற்ற தன்மையை கொண்டிருந்தது. அவை சிரியாவை கட்டுப்படுத்த தேவை என்று அவர் கருதினார்ஆட்சிக்கவிழ்ப்புகள் நடப்பதற்கு அதிக சாத்தியமுள்ள சிரியாவில் ஹபீஸ் அல் அசத் ஆட்சிக்கு வந்தார்.

மேலும் அவர் மிகப்பெரிய சவால்கள் ஏதுமின்றி தன் மகனிடம் மக்களிடமும் அதிபர் பதவியை ஒப்படைத்தார்.

அதேநேரத்தில் பஷர் அல் ஆஷாத் 2011-ஆம் ஆண்டில் தனது தந்தையின் உத்திகளை கையில் எடுத்தார். அது மிகுந்த வன்முறை மற்றும் படுகொலை நிறைந்த ஒரு யுத்தி தான் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே இல்லை.இந்த படுகொலை சம்பவத்தில் 6,00000 பேர் சிரியாவில் இருந்து வெளியேறி உலகின் பல பகுதிகளில் தஞ்சம் அடைந்தனர். அதேநேரத்தில் மற்ற சர்வாதிகார தலைவர்களை விட சிரியாவின் ஒரு சில மக்கள் மத்தியில் அசத் செல்வாக்கு மிக்கவராக இருந்தார்.தனது தந்தை இறந்ததில் இருந்து, சிரியாவில் சீர்திருத்தங்களை கொண்டு வருவேன் என பஷர் வாக்குறுதி அளித்து வந்தார்.

2011 ஆம் ஆண்டு அரபு உலகிலும் குழப்பம் ஏற்பட்டபோது, சில சிரியர்கள் இன்னும் அவரை நம்ப விரும்பினர். தெருக்களில் ஆர்பாட்டங்கள் நடத்தினால் பஷர் சொன்னது போல சீர்திருத்தங்கள் நடைபெறும் என்று மக்கள் நினைத்தார்கள்.ஆனால், அமைதியான போராட்டக்காரர்களை சுடுவதற்கு பஷர் அல் அசத் உத்தரவு பிறப்பிக்கும் வரை மட்டுமே அவர்களின் நம்பிக்கை நீடித்தது.

உலகின் கடும் போக்கு சக்திகள் எப்போதும் இரக்கம் நிறைந்தவர்களாக இருக்க வாய்ப்பே இல்லை. அதே நிலையில் தான் பஷர் அல் ஆஷாத் செயல்பட்டார் என்பதை வரலாறு அறிந்தவர்கள் நன்கு அறிந்த உண்மையாக இருப்பதில்லை நமக்கு வியப்பு ஏதும் இல்லை என்பதை நாம் இங்கு தெளிவாக கோடிட்டுக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சிரியாவை பொறுத்தவரை பஷர் அல் ஆஷாத் ஆட்சிக்கு எதிராக செயல்படுபவர்கள் ஈவு இரக்கம் இல்லாத வகையில் மிகவும் கடுமையான முறையில் தண்டிக்க பட்டனர். அதாவது படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதே உண்மையாகும். தூக்கு மேடை, துப்பாக்கிச் சூடு, சில நிலத்தடி சிறையில் காலவரையற்ற சிறைவாசம் என்று எப்படி வேண்டுமானாலும் நிகழலாம்.இதுபோன்ற நிலத்தடி சிறையில் இருந்து ஆயிரக்கணக்கான கிளர்ச்சியாளர்கள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மெலிந்து, தோல் வெளுத்துபோய், வெளிச்சத்தை கண்டு கண் சிமிட்டும் நிலையில் இருக்கின்றனர். அவர்கள் பல ஆண்டு சிறை வாசத்திற்கு பிறகு சுதந்திரக்காற்றை சுவாசிக்கிறார்கள் . மிகவும் கொடூரமான ஆட்சியில் இருந்த மக்களுக்கு ஏதாவது வகையில் விடிவு காலம் பிறந்துள்ளது என்பதே யதார்த்தமான நிலையாகும். பஷர் அல் அசத் ஆட்சியில் இருந்து அகற்றப்படும் வரை, அவரது ஆட்சியின் பலவீனம் அச்சம் மற்றும் வதை முகாம்களுக்கு பின்னால் மறைந்திருந்தது. உலகம் முழுவதும் வதை முகாம்களில் இருந்து பெரும்பாலான உண்மை நிகழ்வுகள் வெளிப்படையாக யாருக்கும் தெரிவதில்லை.

அதேநேரத்தில் பஷர் அல் அசத் ஒரு பலவீனமானவர். சிரியாவின் மக்கள் கிளர்ச்சி குழுக்களை முழுமையாக அடக்க வேண்டிய சூழல்களில் அவருக்கு பக்க பலமாக ரஷ்யா மற்றும் இரானைச் சார்ந்து இருந்தார் என்பது தான் உண்மையாகும் . மேலும் அவர் தனது குடும்பத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்காக, பல பிரிவுகளாக உடைத்த ஒரு நாட்டிற்குத் தலைமை தாங்குகிறார் என்றும் கருதப்பட்டது.ஆனால் அவர் மத்திய கிழக்கை பொறுத்தவரை ஒரு வலிமையான பயனுள்ள தலைவராக கருதப்பட்டார்.

சிரியாவில் 13 ஆண்டுகாலமாக நடைபெறும் மோதல் தற்போது தீவிரமடைந்து வந்தாலும், ஜிஹாதி குழுவான ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் (HTS), கடந்த வார இறுதியில் அலெப்போ மற்றும் அந்நாட்டின் பிற பகுதிகளை கைப்பற்றியது.இதனைத் தவிர்த்து பல்வேறு குழுக்கள் சிரியா ( SDF) , அல் இஸ்ஷா மூவ்மென்ட், அல் ஹரார் மற்றும் பல்வேறு வலிமையான போராட்ட குழுக்கள் அங்கு நிலை தன்மையுடன் போராடி வருகின்றனர். சிரியாவின் புதிய ஆட்சியாளர்கள் மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்வது இரானுடனான ஒப்பந்தம் செய்துகொள்வதை விட மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று முடிவு செய்தால், சிரியாவில் இரானின் ஆயுத விநியோக சங்கிலி முடிவிற்கு வந்துவிடும். அதாவது தற்போது வலிமையான வாய்ந்த போராளி குழுவாக செயல்படும் (ஹெச் டி எஸ்) சுன்னி பிரிவைச் சேர்ந்த அமைப்பாகும். அவர்கள் வரும் காலங்களில் ஈரான் நாட்டின் தலைவர்களுடன் தொடர்ந்து செயல்பட சாத்தியக்கூறு இல்லை என்பதை தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது. அதனால் தான் சிரியாவில் அடுத்து என்ன நடக்கும் என அனைத்து தரப்பினரும் தீவிரமாக யோசித்து வருகின்றனர்.

தற்போது சிரியா மக்கள், அதன் அண்டை நாடுகள் மற்றும் உலக நாடுகள் மற்றோரு புவிசார் அரசியல் பூகம்பத்தை எதிர்கொள்கின்றன.

இரான் தனது "எதிர்ப்பு அச்சு"-வின் இறுதி வீழ்ச்சியை காண்கிறது.அதாவது ஈரானின் வலிமை வாய்ந்த மாற்று அமைப்பான ஹிஸ்புல்லாஹ் வலிமையான சக்தியாக செயல்பட்டு வந்த நிலையில் அந்த பிராந்தியத்தில் இஸ்ரேலிய மற்றும் ஏனைய நாடுகளுக்கு மிகுந்த பதட்டத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வந்தது.

தற்போதைய நிலையில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு பலவீனமான நிலையில் இருப்பது போன்ற நிலையில் இதன் வருங்கால செயல்பாடுகளை நாம் முழுமையாக அவதானிக்க கூடியதாக இல்லை என்பதை நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது.

லெபனானில் உள்ள ஹெஸ்பொலா படைகளுக்கு ஆயுதங்கள் வழங்க இரான் பயன்படுத்தும் விநியோகச் சங்கிலியில் சிரியா இருக்கிறது. சிரியாவில் உள்ள இலக்குகள் மீது கடும் வான்வழித் தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தி வருகிறது. அதே சமயம் இஸ்ரேலிய ராணுவம் கோலன் குன்றுகளில் ராணுவ நடவடிக்கையற்ற பகுதிக்குள் படைகளை நகர்த்தியுள்ளது.அங்கு இஸ்ரேலிய கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சிரிய நிலப்பரப்பின் அளவையும் விரிவுபடுத்தியுள்ளது. இஸ்ரேல் தனது குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறுகிறது. ஆனால் இஸ்ரேல் தனது நீண்டகால எதிரியை பலவீனப்படுத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதாக மற்றவர்கள் கருதுகின்றனர்.இஸ்ரேலிய பாதுகாப்புப் படை (IDF) இதுவரையிலான காலகட்டத்தில் 310க்கும் மேற்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டதை பதிவு செய்துள்ளதாக பிரிட்டனை தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் (SOHR) தெரிவித்துள்ளது.

வடக்கே அலெப்போவில் இருந்து தெற்கில் டமாஸ்கஸ் வரை சிரிய ராணுவத்தின் முக்கியமான நிலைகளைக் குறி வைத்து இந்தத் தாக்குதல்கள் திட்டமிடப்பட்டன.

ஆயுதக் கிடங்குகள், வெடிபொருள் கிடங்குகள், விமான நிலையங்கள், கடற்படைத் தளங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்கள் உள்ளிட்ட ராணுவ வசதிகளைக் குறிவைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.இந்தத் தாக்குதல்கள் "சிரிய ராணுவத்தின் அனைத்து திறன்களையும்" அழித்து வருவதாகவும், "சிரியா மீதான உரிமை மீறல்" என்கிற கருத்தும் நிலவுகிறது. சிரியாவில் பஷர் ஆஷாத் ஆட்சிக்குப் பிந்தைய சகாப்தத்திற்கு மாறும் இந்தச் சூழலில் ஆயுதங்கள் "பாங்கரவாதிகளின் கைகளில் கிடைப்பதை" தடுக்கவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இஸ்ரேல் கூறுகிறது.2018ஆம் ஆண்டில், டமாஸ்கஸுக்கு அருகிலுள்ள டூமாவில் ரசாயன ஆயுதத் தாக்குதல் நடத்தியதாகபஷர் அல் ஆஷாத் ராணுவம் மீது குற்றம் சாட்டப்பட்டது.ரசாயன ஆயுதங்கள் இருப்பதாகக் கூறப்படும் பஷர் அல்-அசத்தின் ஆயுதக் கிடங்கை எந்தக் குழு கைப்பற்றும் என்பது குறித்து இஸ்ரேல் கவலை கொண்டுள்ளதாக அந்த நாடு தெரிவித்து வருகிறது.

சிரியாவிடம் இதுபோன்ற ஆயுதங்கள் எங்குள்ளன, எத்தனை ஆயுதங்கள் உள்ளன என்பது தெரியவில்லை. ஆனால் முன்னாள் அதிபர் பஷர் அல்-ஆஷாத் அவற்றைப் பதுக்கி வைத்திருப்பதாக இஸ்ரேலிய அரசும் அதன் ராணுவ தலைமையும் சர்வதேச நாடுகள் மத்தியில் கருத்து திணிப்பை விதைத்து வருகிறது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, கோலன் குன்றுகளில் உள்ள ராணுவ நடவடிக்கையற்ற பகுதியை (buffer zone) தமது படைகள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதாக அறிவித்தார். கோலன் குன்றுகள் என்பது சிரியாவின் ஒரு பகுதி, இது இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இது தனது தற்காலிக தற்காப்பு நடவடிக்கை என்று நெதன்யாகு குறிப்பிட்டார்.

"அக்டோபர் 7, 2023இல் ஹமாஸ் நடத்திய தாக்குதலைப் போன்று சிரியா தரப்பில் இருந்தும் வர வாய்ப்புள்ளது. அதுபோன்ற எந்தத் தாக்குதலையும் தடுக்க விரும்புவதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

அதே நேரம் இந்த ராணுவ நடவடிக்கை இஸ்ரேல் முன்னோக்கி நகர்வதற்கும், ஆக்கிரமிக்கப்பட்ட மண்டலத்தின் எல்லைக்கு அருகில் மற்ற சக்திகள் நகர்வதைத் தடுப்பதற்கும் ஒரு வாய்ப்பு" என்றார்.

ராணுவ நடவடிக்கையற்ற பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது குறித்து அரபு நாடுகளின் அறிக்கைகளில் கடுமையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. திங்களன்று எகிப்திய வெளியுறவு அமைச்சகத்தால் இந்த நடவடிக்கை "சிரிய பிராந்தியத்தை ஆக்கிரமித்தல் மற்றும் 1974 பிரிவினை ஒப்பந்தத்தின் அப்பட்டமான மீறல்" என்றும் விவரிக்கப்பட்டுள்ளது.இஸ்ரேலிய படைகளின் முன்னேற்றங்கள் ராணுவ நடவடிக்கையற்ற பகுதியைத் தாண்டி டமாஸ்களில் இருந்து 25 கி.மீ உள்நோக்கிச் சென்றுவிட்டதாக சிரிய அறிக்கைகள் கூறின. ஆனால் இஸ்ரேலிய ராணுவ வட்டாரங்கள் இதை மறுத்தன.கோலன் குன்றுகளில் ராணுவ நடவடிக்கையற்ற பகுதிக்கு அப்பால் அதன் துருப்புகள் செயல்படுவதை இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் முதன்முறையாக ஒப்புக் கொண்டன.

கோலன் குன்றுகள் என்பது தென்மேற்கு சிரியாவில் உள்ள பாறைகள் நிறைந்த பகுதி. அரை நூற்றாண்டுக்கும் மேலாக இப்பகுதி இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1967இல் நடைபெற்ற மத்திய கிழக்கு போரில், கோலன் குன்றுகளின் உச்சியிலிருந்து இஸ்ரேல் மீது சிரியா வெடிகுண்டுகளை வீசியது. ஆனால், விரைவிலேயே சிரிய ராணுவத்தை எதிர்த்து, சுமார் 1,200 சதுர கிலோமீட்டர் அளவிலான அப்பகுதியை இஸ்ரேல் தன்வசப்படுத்தியது. அதாவது இஸ்ரேலிய ராணுவம் ஆக்கிரமிப்பு செய்து கொண்டது கடந்த 1973இல் யோம் கிப்பூர் போரின்போது, கோலன் குன்றுகளை மீண்டும் தன்வசப்படுத்த சிரியா முயன்று, அதில் தோல்வியுற்றது.அதைத் தொடர்ந்து, 1974இல் இரு நாடுகளும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அப்போதிருந்து, இரு நாடுகளுக்கும் இடையிலான போர் நிறுத்தக் கோட்டில் ஐ.நா சபையின் கண்காணிப்புப் படை உள்ளது.

ஆனால், 1981இல் இப்பகுதியை இஸ்ரேல் முழுவதுமாக ஆக்கிரமித்தது. ஆனால், அதை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவில்லை. கோலன் குன்று பகுதியிலிருந்து முழுவதுமாக இஸ்ரேல் திரும்பப் பெறும் வரை, எவ்வித அமைதி ஒப்பந்தத்தையும் ஏற்க மாட்டோம் என, சிரியா தொடர்ச்சியாகக் கூறி வருகிறது.

கோலன் குன்று பகுதியிலுள்ள பெரும்பாலான சிரிய அரபு மக்கள், 1967 போரின் போது அங்கிருந்து வெளியேறினர். தற்போது, அப்பகுதியில் 30க்கும் மேற்பட்ட இஸ்ரேலிய குடியேற்றங்கள் உள்ளன. அதில், சுமார் 20,000 பேர் வசித்து வருகின்றனர். 1967 மோதல் முடிவுக்கு வந்த உடனேயே, இந்த குடியேற்றங்களை இஸ்ரேலிய மக்கள் கட்டமைத்தனர்.

இந்தக் கட்டமைப்புகள் "சட்ட விரோதமானவை" என சர்வதேச சட்டம் கூறுகிறது. ஆனால், இதை இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளவில்லை. கோலன் பகுதியில் குடியேறியவர்கள், சுமார் 20,000 சிரிய மக்களுடன் இணைந்து வாழ்கின்றனர்.

இப்பகுதியில் வாழும் பெரும்பாலான சிரிய மக்கள் ட்ரூஸ் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள், கோலன் குன்றுகளை இஸ்ரேல் ஆக்கிரமித்த பின்னரும் அங்கிருந்து வெளியேறவில்லை.

கடைசியாக கிடைத்த தகவல்கள் அடிப்படையில் சிரியாவை மையப்படுத்தி தான் சர்வதேச போர் ஏற்படுமோ என்கிற அச்ச உணர்வு உலகம் முழுவதும் மேலோங்கி நிற்கிறது. அமெரிக்க புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பதவிக்கு வந்த பிறகு ஈரான் மீது பெருந் தாக்குதலை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது தற்போது வெளியாகியுள்ளது.

சிரியாவின் அரசியல் ஸ்திரத்தன்மை மேம்படுத்த தற்போது எந்தவொரு வழியும் இருப்பதாக தெரியவில்லை. அரசு படைகள் உட்பட பல்வேறு தீவிரவாதிகள் நிறைந்த போர் மண்டலமாக சிரியா தற்போது மாறியுள்ளது.

இதனைத் தவிர்த்து அமெரிக்கா, ரஷ்யா, இஸ்ரேல் , துருக்கி ஈரான் என்று பல்வேறு நாடுகளின் பிடிக்குள் தான் சிரியா என்கிற ஒரு தேசம் அடைபட்டுக் காணப்படுகிறது.

இந்த நாடுகள் தங்கள் கொள்கைகளை முன்னிறுத்தி பல்வேறு போராளிகளை ஒழுங்குபடுத்தி தமக்கான பிடிகளை வலுவாக்கி வருவதைக் காண கூடியதாக உள்ளது. அதே சமயம் வலுவான போராளிகள் மற்றும் தீவிர தன்மை கொண்ட பயங்கரவாத குழுக்கள் இத்தனை ராட்சத சக்திகளுக்கு மத்தியில் ஜனநாயகம் என்பது எந்தவொரு வகையிலும் சாத்தியம் இல்லாத ஒன்றாகத்தான் இருக்கிறது.

இது போன்ற இறுக்கமான சூழ்நிலையில் அந்த மண்ணின் வாழும் மக்களின் அபிலாஷைகளை நினைவுபடுத்தும் சமாதானம் விரும்பிய ஒரு ஆட்சியாளரின் கீழ் ஒரு ஆட்சி நிறுவப்பட வேண்டும் என்பதே அனைவரின் ஆசையாக உள்ளது.

இந்த ஆசை சிரியா மக்களின் ஆசை மட்டுமல்லாமல் சர்வதேச மனித உரிமைகளை மதிக்கும் அனைவரின் ஏக்கமாகத்தான் உள்ளது.அதிகார நாடு பிடிக்கும் சர்வாதிகார படுகொலை சக்திகள் இன்று வெற்றி பெறலாம். அது நீண்ட கால வெற்றியாக இருக்காது என்பதை சிரியா உறுதிபடுத்தும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதற்கான பதிலை காலம் நிச்சயமாக தரும் என்பதில் எந்த ஐயமும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.....!

# அரசையே நெருக்கடிக்குள் தள்ளிய போலி கல்வி சானறிதல்கள்!



எம்.எஸ். அமீர் ஹுசைன்



என்.பி.பி அரசாங்கத்தின் பாராளுமன்ற சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல 2024.12.13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அவர் வகித்த சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்தார். அவர் கலாநிதி பட்டம் பெற்றவர் என்று வழங்கப்பட்டிருந்த தகவல்களில் உண்மைத் தன்மை இல்லை என்ற தகவல்கள் வெளியாகியதும் நாட்டில் பரவலாக பேசு பொருளாக மாறி சமூக ஊடகங்கள் வாயிலாக கிளப்பட்ட சர்ச்சை காரணமாக அவர் இந்த பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். அரசாங்கம் மக்களுக்கு நேர்மையான ஆட்சியை வழங்குவதாக கூறி பதவிக்கு வந்ததால் அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ள விரும்பாததால் தான் சபாநாயகர் பதவியை இராஜினாமாச் செய்வதாக சபாநாயகர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது கல்வித் தகைமை பற்றி தெரிவிக்கையில் தாம் கலாநிதி பட்டம் பெற்றிருந்தாலும் அந்த கல்வித் தகைமையை நிரூபிக்கும் அளவிற்கு தேவையான தகவல்கள், ஆவணங்கள் தற்போது கையில் இல்லாததாலும் அவை நீண்ட காலத்திற்கு முன்னர் பெற்றுக்கொண்டவையாக இருப்பதால் தவறிப் போய்விட்ட தாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் அவருக்கு கலாநிதி பட்டம் பெற்றமைக்கான எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை என்ற தகவல் வெளையாகியவுடன் பாராளுமன்ற இணையத் தளத்தில் இருந்து அவர் கலாநிதி என்ற பட்டம் நீக்கப்பட்டிருந்தது. அத்துடன் அவர் கலாநிதி பட்டம் பெற்றதாக கூறப்பட்ட ஜப்பானின் வஸேடா பல்கலைக்கழகத்தில் சபாநாயகர் ரன்வலவுக்கு கலாநிதி பட்டம் வழங்கியமைக்கான தகவல்கள் எதுவும் பதிவுகளில் இல்லை என்ற தகவல்கள் சமூக ஊடகங்கள் வாயிலாக பரப்பட்டு பட்டை கிளப்பப்பட்டதால் அவர் தொடர்ந்தும் சபாநாயகர் பதவியை வகிப்பது அவருக்கும் அவர் சார்ந்த அநுரகுமார திசாநாயக்காவின் அரசாங்கத்திற்கும் நல்லதல்ல என்ற காரணத்தால் பதவியை இராஜிநாமாச் செய்யும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

சபாநாயகரின் பதவி விலகலுடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களது கல்வித் தகைமைகள் பட்ட சான்றிதழ்கள் தொடர்பாக ஆழமான சந்தேகங்கள் கிளப்பப்பட்ட நிலையில் புதிய சர்ச்சைகள் உருவாகி இருக்கின்றன. இந்த சர்ச்சை அரசாங்கத்தை பாரிய நெருக்கடிக்குள் தள்ளும் என்று கருதப்படுகின்றது. சபாநாயகரின் கல்வித் தகைமை பற்றிய விடயத்தில் உண்மைத் தன்மை இல்லை என்ற தகவல் உறுதியாகிய வுடன் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரியவின் கலாநிதி பட்டம் தொடர்பாகவும் சந்தேகங்கள் கிளப்பப்பட்டிருக்கின்றது. பிரதமர் ஹரிணி எடின்பரோ பல்கலைக்கழகத்தில்ீான செய்து கலாநிதி பட்டம் பெற்றதாக தெரிவித்துள்ளார்.

ஆனாலும் அது பற்றிய தகவல்கள் தேடப்பட்ட போது எடின்பரோ பல்கலைக்கழகத்தில் அவர் பல்கலைக்கழகத்தில் இருந்த போது 03 மாத கால குறுகிய கால கற்கை நெறி ஒன்றுக்காக புலமைப் பரிசில் பெற்று சென்றவர் என்றும் இரண்டு வருடங்கள் அல்லது முழு நேர கற்கை நெறியை பயின்று கலாநிதி பட்டம் பெற்றவர் அல்ல என்ற தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அதனால் அவரது கலாநிதி பட்டமும் போலியானது என்ற தகவல் நிரூபிக்கப்படுமானால் பிரதமர் பதவியில் இருந்து ஹரிணியும் பதவி விலகுவாரா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. அத்துடன் மேலும் பத்துப் பேர்களது கலாநிதி மற்றும் பல்கலைக்கழக பட்ட சான்றிதழ் தொடர்பாக புதிய சர்ச்சைகள் கிளம்பி இருக்கின்றது.

அதிலும் மருத்துவ துறை டாக்டர் பட்டம் பெற்றவர் என்று கூறப்பட்டவர் கால்நடை மருத்துவர் என்றும், பிரதி சபாநாயகர் பதவி வகிக்கின்ற ரிஸ்வி சாலி என்பவர் சிறப்பு பயிற்சி பெற்ற (ஸ்பெசலிஸ்ட்) டாக்டர் என்று பதிவுகளில் கொடுக்கப்பட்ட தகவல்கள் கூறியதாகவும் இப்போது சபாநாயகர் பதவி விலகலின் பின்னர் அவர் ஒரு சாதாரண வைத்தியர் (டாக்டர்) தவிர சிறப்பு அல்லது விஷேட துறை டாக்டர் அல்ல என்ற தகவலும் வெளியாகி இருக்கின்றது. அவர் பாகிஸ்தானின் முஸ்தாக் நிஸ்தர் மருத்துவ கல்லூரியில் மருத்துவராக டாக்டர் பட்டம் பெற்றதோடு இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட 38 வருட கால அனுபவத்தை பெற்ற வைத்தியர் என்றும் உறுதிப்படுத்தி இருக்கின்றார். இதில் ஆச்சரியம் என்னவென்றால் தேர்தலுக்கு முன்னர் ஸ்பெசலிஸ்ட் டாக்டராக இருந்தவர் தேர்தலின் பின்னர் சர்ச்சைகள் கிளம்பியவுடன் சாதாரண டாக்டரானது எவ்வாறு என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

இவ்வாறாக மேலும் 10 பேரின் பட்டம் தொடர்பாக புதிய சந்தேகங்கள் கிளப்பப்பட்டு வருகின்றது. அதிலும் மின்சக்தி அமைச்சர் புன்னிய ஸ்ரீ ஜயகொடி பீஎஸ்சி பட்டம் பெற்றவர் என்று பதிவுகளில் குறிப்பிட்டிருந்தாலும் அவர் 2017 ஆம் ஆண்டு வரையில் பல்கலைக்கழகத்தில் அந்த பட்டத்தை நிறைவு செய்திருக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. நிதி அமைச்சராக இருக்கின்ற ஹர்சன் நாணயக்காரவின் கலாநிதி பட்டம் பாராளுமன்ற இணையத் தளத்தில் இருந்து நீக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே அவர் ஒரு கலாநிதி பட்டம் பெற்றவர் என்று பிரபல்யப்படுத்தப் பட்டிருந்தாலும் இப்போது அவருக்குரிய பட்டம் இல்லை என்பதும் அவர் வழங்கி இருந்த தகவல்கள் தவறானவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறே அநுர கருணாதிலக, அசோக ரன்வல, அருண ஜயந்த, ஹர்சன நாணயக்கார, அருண ஜயகொடி, நலிந்த ஜயதிஸ்ஸ, பிமல் ரத்னாயக்கா, தருண திசாநயக்க, கோசல ஜயவீர ஆகியோர்களது பல்கலைக்கழக பட்டம் தொடர் பாகவும் சந்தேகங்கள் கிளப்பட்டு சமூக ஊடகங்கள் வாயிலாக கருத்துப் பரிமாறல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வாறாயின் அரசாங்கம் தேர்தல் காலங்களில் அவர்களுடன் நல்ல கற்றறிந்த அறிவாளிகள், கல்விமான்கள், விற்பன்னர்கள், நிபுணத்துவம் மிக்கவர்கள் இருப்பதாகவும் படிப்பறிவு இல்லாதவர்களால் கடந்த 70 வருடங்களாக நாடு நாசப்படுத்தப்பட்டதாகவும் கூறப்பட்ட கூற்றுக்களுக்கு முற்றிலும் மாற்றமான நிலையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களது நிலையாகும் என்று கூறப்படுவதால் இவர்களில் யார் உண்மையானவர்கள், யார் போலியானவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

முன்னைய ஆட்சிக் காலப்பகுதியில் பதவிகளில் இருந்தவர்களை திருடர்கள் என்றும் மோசடிக்காரர்கள் என்றும் தூற்றிய அரசாங்கம் தமக்குள்ளேயே இவ்வாறான பொய்க்காரர்களை வைத்திருக்கின்றது என்றால் அது ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்காவிற்கு அவமானத்தை தேடிக் கொடுப்பதாகும். அத்துடன் முஸ்லிம் சமூகத்தில் அமைச்சர் பதவி ஒன்றை பெறும் அளவிற்கு தகுதியான படிப்பறிவு உள்ளவர்கள் இல்லை என்று அந்த சமூகத்தின் அறிவு மட்டத்தையும் கல்வி நிலையையும் கொச்சைப்படுத்திய அரசாங்கம் தமக்குள்ளேயே கள்ளத்தனமானவர்களை வைத்துக்கொண்டு அவர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கி இருக்கின்றது என்றால் அது எந்தளவுக்கு அவமானத்திற்கும் வசைபாடல்களுக்கும் உள்ளாகும் விடயம் என்பதை சிந்திக்க வேண்டும். போலியான கல்விச் சான்றிதழ்களை வழங்கி மக்களை ஏமாற்றி பதவிகளை வகிப்பதென்பது நாட்டு சட்டப்படி பாரிய குற்றமாகும். அதனால் இவ்வாறாக மக்களை ஏமாற்றியவர்கள் மேலும் இருந்தால் அவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

# பாராட்டு பெறுவதில் கிழக்கு மாகாண அதிபர், ஆசிரியர்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளார்கள்

## கிழக்கு ஆளுனரிடம் இம்ரான் எம். பி குற்றச்சாட்டு

(எஸ் ஏ.பறூஸ்)

கடந்த ஆண்டு க.பொ.த சா.த பரீட்சைப் பெறுபேறுகளின் படி கிழக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் 2 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. இது தொடர்பாக நடத்தப்பட்ட பாராட்டு விழாக்களில் அதிபர் ஆசிரியர்கள் புறக்கணிக்கபட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃஷுரூப் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் இரத்தினசேகரவின் கவனத்திற் கொண்டு வந்துள்ளார்.

ஆளுநரை நேரில் சந்தித்து பேசிய அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த காலங்களில் க.பொ.த (சா.த) பரீட்சை அடைவு மட்டத்தில் பின்னடைந்திருந்த கிழக்கு மாகாணம் கடந்த ஆண்டு 2ஆம் இடத்திற்கு முன்னேறியிருந்தது. இதற்காக கிழக்கு மாகாண பிரதம செயலாளரினால் மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இதேபோன்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

எனினும்இ அடைவு மட்ட அதிகரிப்புக்கு பிரதான காரணமாக இருக்கின்ற , அதிபர்கள், ஆசிரியர்கள் எவரும் இதுவரை கௌரவிக்கப்படவில்லை. அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் பெரிதும் மன உழைச்சலுக்கு ஆளாகி உள்ளனர். இது போன்ற பாரபட்சங்கள் தங்களது நிர்வாகத்தின் கீழ் இனிமேல் இடம்பெறாதிருக்கும் வகையில் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும் என்பதை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு



வருகின்றேன்.

எனவே தயவு செய்து இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு இந்தப் பெறுபேறு விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிபர், ஆசிரியர்களையும் விரைவில் கௌரவிக்க ஏற்பாடு செய்ய வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்க நடவடி-க்கை எடுக்க வேண்டும் என அவர் ஆளுநரைக் கேட்டுக் கொண்டார்

# ஓய்வு பெற்ற அதிபர் எம்.ஏ.எம்.அக்ரம் "கலாபூஷண" விருது பெற்றார்




இலங்கையின் கலைத்துறைக்கு உன்னத சேவையாற்றிய கலைஞர் களை கௌரவிக்கும் 39 ஆவது வருடாந்த "கலாபூஷண அரச விருது விழா" அலரி மாளிகையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கேகாலை மாவட்ட எட்டியாந்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் எம்.ஏ.எம்.அக்ரம் "கலாபூஷண" விருது வழங்கி கௌரவிக்கப்ப ட்டார். இவர் எட்டியாந்தோட்டை, கராகொடை முஸ்லிம் மஹா வித்தியாலயம் மற்றும் இரத்தினபுரி, குருவிட சாஹிரா முஸ்லிம் மஹா வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் அதிபர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# லங்கா கேக் ஐகோனிக் விருது வழங்கும் விழா

(அஷ்ரப் ஏ சமத்)

சிலிக்கா (SriLanka of Confectionery & Culinary Art) நிறுவனத்தின் வருடாந்த கேக் கண்காட்சி மற்றும் ஸ்ரீ லங்கா கேக் ஐகோனிக் விருது விழா எதிர்வரும் டிசம்பர் 21, மற்றும் 22 ஆம் திகதிகளில் சனி, ஞாயிறுகளில் தினங்களில் மு.ப. 10.00 முதல் பி.ப.7.00 வரை காட்சிப்படுத்தப்படுவ துடன், இந் நிகழ்வு கொள்ளுபிட்டியில் உள்ள மெரினோ பீச் ஹோட்டலில் வெகு விமர்சையாக இடம்பெறவுள்ளது.

சிலிக்கா நிறுவனத்தின் தலைவி கலாநிதி தேசமான்ய பாத்திமா ருஷ்தா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வின் முதல் நாள் நிகழ்வில் இலங்கையில் உள்ள துருக்கி தூ துவராலயத்தின் துருக்கி கவுன்சிலர் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். இதன் போது ஐந்து பிரிவுகள் உள்ளடக்கிய நேரடி போட்டிகள் இடம்பெறும்.

இதில் நாடளாவிய ரீதியில் இருந்து 70 இற்கும் மேற்பட்ட கேக் செய்பவர்கள் போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். 200இற்கும் மேற்பட்ட கேக் காட்சி கூடங்கள் கண்காட்சிக்காக வைக்கப்படவுள்ள அதேவேளை, சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை பொதுமக்களுக்காக பார்வையிட முடியும்.

இரண்டாம் நாள் நிகழ்வில் வருடாந்த பரிசளிப்பு விழா இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கைக்கான துருக்கித் தூதுவர் Semih Lutfu Turgut மற்றும் துருக்கி கவுன்சிலர் Merve Gozde Otlu ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மேலும் விசேட அதிதிகளாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் விரிவுரையாளர் பேராசிரியர் இந்தியானா நாணயக்கார விசேட பேச்சாளராகவும் விசேட அதிதியாக மௌலானா அஸ்ஸெய்யிது தங்கள் காதிரி காலண்டர் இந்தியாவிலிருந்து வருகை தரவுள்ளார். இம்முறை 175 இளைஞர் யுவதிகள் இவ் சுயதொழில் பயிற்சிகளை நிறைவு செய்து விரு-






துகளையும் தொழிற் கல்வி டிப்ளோமா சான்றிதழையும் பெறும் அதேவேளை 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிலிக்கா நிறுவனம் இதுவரை 13 ஆயிரத்து 700 இற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு இத்துறையில் தொழிற் கல்வி டிப்ளோமா மற்றும் சுற்றுலா விருந்தோம்பல் பட்டப்படிப்பு களை வழங்கி வருகின்றமை விசேட அம்சமாகும்

# அஸீஸ் எம் பாயிஸுக்கு இளங்கலைஞர் விருது



(இஸட்.ஏ.றஹ்மான்)

கிழக்கு மாகாணப் பண்பாட்டலு வல்கள் திணைக்களத்தின் கிழக்கு மாகாண இலக்கிய விழா கடந்த 11 ஆம் திகதி திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ. ஜி. திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவில் 2022, 2023 மற்றும் 2024 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு மான கலைஞர்கள் தெரிவு இடம்பெற்றது.

இதில் 2022ஆம் ஆண்டின் பல்துறைக்காக இளங்கலைஞர் விருது ஒலுவில் அஸீஸ் எம். பாயிஸுக்கு வழங்கப்பட்டது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுனர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர மற்றும் சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க ஆகியோர் கலந்து கொண்டதோடு அமைச்சுக்களின் செயலாளர்கள் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# போலியான கல்விச் சான்றிதழ்கள் சமர்ப்பித்து நியமனம் பெற்ற 14 ஆசிரியர்கள் சேவை நிறுத்தம்

(எம்.ரீ.ஆரிப்)

வடமத்திய மாகாணத்தில் போலியான கல்விச் சான்றிதழ்கள் மற்றும் நகல்களை சமர்பித்து நியமனம் பெற்ற 14 பட்டதாரி மற்றும் பயிற்சி ஆசிரியர்களின் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண பிரதான அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்தார்.

கடந்த 1997 ஆம் ஆண்டு தொடக்கம் வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றுவ தற்காக அவ்வப்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 14 பட்டதாரி மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளது. பணிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் எட்டு முதல் இருபத்தைந்து ஆண்டுகள் வரை பணியாற்றியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் சேவையில் இணையும் போது சமர்ப்பிக்கப்பட்ட க.பொ.த சாதாரண தரம் ,உயர் தரம் மற்றும் பட்டப்படிப்பு சான்றிதழ்கள் அனைத்தும் போலியானவை என கண்டறியப்பட்டுள்ளதாக பிரதான அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்தார்.

இந்த ஆசிரியர்களின் கல்விச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைச் சரிபார்க்க மாகாண போது சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் பட்டதாரிகளில் சிலர் வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் படித்தத ற்கான போலியான பட்டச்சான்றிழை சமர்ப்பித்துள் ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யுனைடெட் பிரண்ட்ஸ் கழகத்தின் புதிய ஜேர்ஸி அறிமுக நிகழ்வு

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

மத்திய முகாம் யுனைடெட் பிரண்ஸ் விளையாட்டு கழகத்தின் வேண்டுகோளிற்கிணங்க நளீர் பௌன்டேசன் அமைப்பின் அனுசரனையில் புதிய ஜேர்ஸி அறிமுகம் செய்து வழங்கி வைக்கும் நிகழ்வு அமைப்பின் காரியாலய த்தில் (14) இடம்பெற்றது.

அமைப்பின் ஸ்தாபக தலைவர் எம்.ஏ. நளீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் களான எம்.ஐ.ஜஹான், தி.யோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மத்திய முகாம் முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசலின் மௌலவி றிபாஸ், அமைப்பின் செயற்பாட்டாளர் ஹஸீப் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் நளீர் பௌன்டேசன் அமைப்பின் தலைவர் உரையாற்றும் போது..



எமது அமைப்பானது பல்வேறு பட்ட சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதனை சகித்துக் கொள்ள முடியாத சிலர் இதற்கெதிராக பல்வேறு சதித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இருப்பினும் எமது பணிகளை கைவிடாமல் தொடர்ந்தும் முன்கொண்டு செல்வோம். இதற்காக உங்களைப் போன்ற இளைஞர்களின் பங்களிப்பு மிகமிக அவசியம் எனவும் எதிர்காலத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும், தற்போது பலவேலைத்திட்டங்கள் நிறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன் பின்னர் விளையாட்டு கழகத்தின் புதிய ஜேர்ஸி அறிமுகம் செய்து வைக்கப்பட்டு கழக உறுப்பினர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எம்.அஷ்ரப்கான் சிறப்பதிதியாக கலந்து கொண்ட 106 ஆவது வகவக் கவியரங்கு!



வலம்புரி கவிதா வட்டத்தின் 106 ஆவது கவியரங்கு இம்மாதம் 14 ஆம் திகதி காலை கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெற்றது. மறைந்த கவிஞர் எம்.ஏ.எம். ஆறுமுகம் நினைவரங்கில் நடைபெற்ற கவியரங்கிற்கு கலாபூஷணம் கவிஞர் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் தலைமைத் தாங்கினார்.

வகவ ஸ்தாபக உறுப்பினர் சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர் கனி முன்னிலை வகித்தார். முஸ்லிம் சேவையின் நாடக உலக ஜாம்பவான் எம். அஷ்ரப்கான் சிறப்பதிதியாக நிகழ்வில் கலந்து கொண்டு வகவ நிகழ்வுகளை கௌரவப்படுத்தினார்.

வலம்புரி கவிதா வட்டத் தலைவர் என் நஜ்முல் /ஹுசைன் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். வரவேற்புரையை செயலாளர் இளைநெஞ்சன் முர்ஷிதீனும் நன்றியுரையை பொருளாளர் ஈழகணே/ம் வழங்கினர். அத்துடன் மறைந்த கவிஞர் எம்.ஏ.எம். ஆறுமுகம் பற்றிய நினைவுகளை இருவரும் சிறப்பாகப் பதிவு செய்தனர்.

அண்மையில் நம்மை விட்டும் பிரிந்த கவிஞர் எம்.ஏ.எம். ஆறுமுகம், கவிஞர் வேதாந்தி சேகு இஸ்ஸதீன், கவிஞர் மௌலவி காத்தான்குடி பௌஸ், மீடியா போரம் தலைவர் என்.எம். அமீன் அவர்களின் தாயார், மறைந்த கலைஞர் ஸ்ரீதர் பிச்சையப்பாவின் தாயார் ஆகியோருக்கான மௌனப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

106 ஆவது கவியரங்கினைத் தலைமையேற்று நடாத்திய கவிஞர் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்ஸை வரவேற்று கவிஞர் பர்ஹத் சித்தீக் கவிதை பாடினார்.

கவியரங்கில் கவிஞர்கள் ஆர். தங்கமணி, இறைஞானக் கவி ரமீஸ், மஸீதா அன்ஸார், எம்.ஆர்.எப். சிபாயா, வாசுகி வாசு, கிண்ணியா அமீர் அலி, அருந்தவம் அருணா, அப்துல்லாஹ் ஷியாமிர், கலேவெல அமீன், ராஜன் நஸிருத்தீன், தாமரைச் செல்வி, சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், எம். எஸ். அப்துல் லதீப், மலாய்கவி டிவாங்ஸோ, பதுளை கபிலகன் ஒகஸ்டீன், தமிழ்த் தென்றல் அலி அக்பர், தி. ஸ்ரீதரன், எச். பாத்திமா நிஹ்லா, ராஜா நித்திலன். வாழைத்தோட்டம் எம்.வஸீர், சிந்தனைப் பிரியன் முஸம்மில், தெஹியோவிற்ற இரா. சிவராசா, அருந்தவம் அருணா, ஆர். எஸ். ரஸ்மியா ஆகியோர் கவிதை பாடினர்.

எம்.எஸ்.எம். ஜின்னா, அஸீஸ் லக்ஹானா, எம்.ஐ.எஸ். ஹமீத், கலைநிலா சாதிகீன், எஸ்.எச்.எம். இத்ரீஸ், கம்மல்துறை இக்பால், கவிநேசன் நவாஸ், எம்.ஜே.எம். ஜப்ரான், எம்.பீ.எம். சித்தீக், எம். எப். பஸ்மி, எம்.ஐ.எப். ருக்ஷானா போன்றோர் சபையை அலங்கரித்தனர்.




# வாசக உலகு குறித்து ஒரு பார்வை

இன்று உலகம் உயிர்த்துடிப்புடன் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு வாசிப்பு பண்பாடு தான் பிரதான காரணமாக உள்ளது. வாசிப்பதன் காரணமாகவே எண்ணற்ற ஆய்வுகளும் முடிவுகளும் பேசுபொருளாக மாறி விடுகின்றன. இந்நிலையில் வாசிப்புலகில் நுழைந்து பார்க்கின்ற பொழுது தான் அது எத்தகைய புதுமைகளை புத்தாக்கங்களை தருகின்றது என்பதனை உணரக்கூடியதாக உள்ளது.

தேசிய அளவிலும் உலக அளவில் தினம் தினம் எண்ணற்ற நூல்கள் வெளியிடப்படுகின்றன இணைய வழியாகவும் அவற்றை வாசிக்கக் கூடியதாக உள்ளது உடனுக்குடன் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளும் உள்ளதால் உலகின் எந்த மூளை முடுக்கில் வாசகன் இருந்தாலும் வெளியிடப்படக்கூடிய புத்தகங்களை வாசிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன. இருப்பினும் அதையும் கடந்து இன்னும் இலகு படுத்தப்பட்டதாக ஒளி வடிவ புத்தகங்களையும் தரவிறக்கம் செய்து செவிமடுத்து கிரகிக்கக்கூடிய வசதிகளும் உள்ளன.

இவ்வளவு வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு இருப்பினும் ஒப்பிட்ட அளவில் வாசிப்பு மனோநிலை மந்த நிலையில் தான் இருப்பதனை மறுக்க முடியாது உள்ளது.

இன்று எழுத்தாளர்களும் நூல்களும் பெருக்கெடுத்திருக்கின்ற அளவுக்கு வாசகர்கள் இல்லை என்பதே கசப்பான உண்மை டிவைவநச வசரவா.

வாசிக்க வேண்டும் என்பதனை அழுத்திச் சொல்லுகின்ற அளவுக்கு அவர்களே வாசிப்பை விட்டும் மிக மிக தூரமாக இருப்பது கண் கூடு.

முன்னட்டைகளோடும் முன்னுரைகளோடு மாத்திரமே வாசிப்பை முடித்துக் கொள்ளக்கூடிய பலரும் உள்ளனர்.

வாசித்துப் பல வருடங்களாகிய ஆசிரியர்கள் அதிபர்கள் கல்வித்துறை அதிகாரிகள் பலரையும் காணலாம்.

வாசிப்பு வாழ்வாக மாறாவிட்டால் வாசிப்பு பற்றி பேசி எப்பயனும் இல்லை.

**மாணவர்களும் வாசிப்பும்**

மாணவர்களை வாசிக்க வேண்டும் என தூண்டக்கூடிய பலரும் வாசிப்பு உலகில் தம்மை மறந்து விடுகின்றனர். குறிப்பாக வகுப்பு ஆசிரியர்களும் பாட ஆசிரியர்களும் அதிபர்களும்

மாணவர்களிடம் வாசிப்பை எதிர்பார்க்கக் கூடிய அளவுக்கு வாசிக்க மாட்டார்கள் என்பதை கல்வி உலகில் முன்வைக்கப்படும் பொதுப்படையான அவதானம். மாணவர்களில் மாற்றத்தை கொண்டு வர ஆசிரியர்கள் முதலில் வாசிக்க வேண்டும். வாசிக்க வேண்டிய நூல்கள் பற்றிய அறிமுகம் அனுபவம் அவர்களுக்கு இருக்க வேண்டும். அந்த புத்தகங்களை வகுப்பிலே அன்றாடம் அறிமுகம் செய்ய வேண்டும். அது குறித்து கலந்துரையாட வேண்டும். தங்களுடைய பாடங்களோடு தொடர்பான நூல்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும்.

பாடசாலைகளிலே நூலகம் எந்தளவு தூரம் சிறப்பாக செயல்படுகின்றது என்பதை அதிபரும் நிர்வாகமும் கட்டாயம் பார்க்க வேண்டும். அவதானம் செலுத்த வேண்டும். மேலதிகாரிகளும் விஜயங்களை மேற்கொண்டு நிர்வாகம் சார்ந்த விடயங்களை மாத்திரம் பார்க்காமல் மாணவர்களது வாசிப்புத் திறனை, தேர்ச்சியை, ஈடுபாட்டை கட்டாயம் அலசி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

வாசிப்பு சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாதாந்தம் கட்டாயப்படுத்தியாக வேண்டும்.

மாணவர்களது எழுதாக்கங்களுக்கான ஒரு புறச்சுவர் ழிநஜ டிழுயசன வெளிச்சுவர் திறந்த சுவர் ஒவ்வொரு பாடசாலையிலும் உருவாக்கப்பட வேண்டும். மாதாந்தம் ஒவ்வொரு வகுப்பில் இருந்தும் ஒரு மாத சஞ்சிகை மாசிகை பிரிசுரிக்கப்பட வேண்டும்.

வாசிப்பு க்கான மாற்றீடு

வசிக்க வேண்டும் என்று மாத்திரம் சொல்லிக் கொண்டிருப்பதால் வாசிப்பு அதன் பாட்டில் மலர்ந்து விடாது.

மாணவர்களிடம் கையடக்க தொலைபேசி பாவனை, போதை பொருளுக்கு அடிமையாதல், திரைகளுக்கு முன்னால் தம்மை மறந்து போதல் போன்றவற்றை பற்றி மாத்திரம் பேசிக் கொண்டிருக்காமல் வெற்றிக்கான உருப்படியான தீர்வுகளையும் கல்விச் சமூகம் தர வேண்டும்.

அப்பொழுது மாத்திரம்தான் அவற்றிலிருந்து விடுவித்து அந்த இடத்தை வாசிப்பால் நிரப்ப முடியும்

ஊர் கூடி தேரிழுத்தால் மட்டுமே இது சாத்தியம்

சுய கற்றல் சுய வாசிப்பு போன்றவற்றுக்கு போதனைகள் மாத்திரம் போதுமானதாக அமையாது. அதனை நடைமுறைச் சாத்தியப்படுத்தக் கூடிய அனைத்து வழிமுறைகளையும் நாம் மாணவர்களின் பார்வைக்கு அருகில் கொண்டு செல்ல வேண்டும்.

அதற்கான வழிகளையும் சமூகம் செய்ய வேண்டும்.

கல்விப்புலம், அதாவது ஆசிரியர்கள் இதை சாத்தியமாக்கினால்

அடுத்த தலை முறை வாழும். மீளும். உயர்ந்தெழும்.

ஆகாய கோட்டைகள் மாத்திரம் கட்டிப் பயனில்லை. அவற்றை தரையிறக்கி கைகளில் சேர்த்து விடுவதற்கான படிக்கட்டுக்களையும் படிமுறையொழுங்கில் நாம் தான் அமைத்துக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் வாசக உலகில் வாசகர்கள் ஆர்வத்தோடு இருப்பார்கள்.






நாச்சியாதீவு பர்வீன்

# "பாரதி" என் இருதய நதி

– சாஜித் அஹமட் –

இன்று நம்ம பார்ட்டிக்காரன் பிறந்த நாள். அதிலும் முறுக்கு மீசையுடன் முரட்டுக்காரனாய் கவிதை எனும் மென் பொருளை வன்மையாய் பாடியவன் பாரதி. தமிழ் கலையினை மெல்லெனத் தின்று ஐரோப்பிய கலா ரசனையினை தமிழ் உள்ளத்தில் ரகசியமாய் பாய்ச்சியவன். எனினும் பாரதியின் காதல் பாட்டுகள் எப்படியெல்லாம் உள்ளக்கிடைக்கையினை உசுப்பியது என்பதை கண்ணம்மா பெருங் கதையாய் சொல்கிறாள். கும்மியடி கும்மியடி என்று பெண் விடுதலை பாடும்போது பெண்ணாக தன்னை உருவகம் கொண்டான்.

“ஏட்டையும் பெண்கள் தொடுவது
தீமை என்றிருந்தவர் மாய்ந்து
விட்டார் வீட்டிற்குள் பெண்களை பூட்டி
வைப்போமென்ற விந்தை மனிதர் தலை
கவிழ்ந்தார்“

என வெள்ளைக்காரனின் உபதேசத்தினை பிராமண தேசத்தினில் புகுத்தினான் பாரதி. கண்ணம்மா எனும் காதல் மட்டுமே அவனது அசூர உள்ளத்தில் தேனருவியாய் பதுமை கிளப்பிற்று.

“ஆசை முகம் மறந்து போச்சே
இதை யாரிடம் சொல்வேணடி தோழி.
நேசம் மறக்கவில்லை நெஞ்சம்
எனில் நினைவு முகம் மறக்கலாமோ“

எனும் பாரதியின் அதி அற்புத காதலை இதுவரைக்கும் யாருமே பாடியதில்லை. ஆனாலும் இந்த காதலில் மனத்திலிருந்த கர்வமும், சூரசம் ஹாரமும் வீரிட்டெழுந்தன பாரதியிடம்.

“கேளடா! மானிடர் வாழ்க்கையில்
கீழோர் மேலோர் இல்லை“

என வெகுண்டெழுந்தான். தோளில் தங்கியிருந்த கயிற்றை அறுத்தான், மீசை வளர்த்தான், தலைப்பாகை கட்டினான் சமூக விரோத கவிஞனான். பாவப்பட்ட உலகம் அப்போது அவனை கண்டு கொள்ளவில்லை. மரணத்தின் படுக்கையில் கூட நாலு பேர் மட்டுமே எஞ்சியிருந்தார்கள். கவிதைகளைத் தாண்டியும் கட்டுடைப்பான பல கடிதங்களை எழுதினான். தனது வறுமை பற்றியும், குழந்தைகளின் நோய் பற்றியும் பணக்கார வர்க்கத்திற்கு எழுதினான். சிலர் அவனுக்கு உதவினர், சிலர் பாராமுகமாய் விட்டனர். அங்கொன்றும் இங்கொன்றுமாய் விடுதலையின் காதலை பாடியபடியே வறுமையினை ரசித்தான், வெறுத்தான் பாரதி. அவனது இளமைச் சூட்டுடான கவிதைகளின் பாராமுகம் எதிர்த்திசையின் முழுச் சக்கரங்களினையும் சுழற்றியடித்தது.

“பொன்னை உயர்வை பொருளை
விரும்பிடும் என்னைக் கவலைகள்
திண்ணத் தகாதென்று நின்னைச்
சரணடைந்தேன் கண்ணம்மா“

வாழ்வின் மீதான ஒட்டு மொத்த அழகியலின் வாசத்தை பாரதி உணர்ந்தான். இயற்கையின் ரம்மியமும், அதில் உலாவும் பறவைகளும், அவற்றின் கீச்சிடும் சப்தங்களும் அவனை ஆழ் உலகின் அசுரங்களை அலச வைத்தன. வெற்றியின் பெருமிதம் கொள்ளும் எட்டாயுபுரத்தின் மகாகவி பட்டத்தினை அவன் துறக்கவில்லை. ஆனாலும் படு சோம்பேறியாய் அரண்மனையிலிருந்து புடுங்கிப் பாடும் கவிதைகளின் மோகனத்திற்கு முற்றிலும் தடை விதித்தான். பிரமாணத்தின் எதிர் சக்தியாகி கழுதைகளை கொஞ்சத் துவங்கினான். நிர்வாணத்துடன் குளித்தான். மழைச் சாறல்களில் உறங்கினான். பசிக்கும் கவிதை, பட்டினிக்கும் கவிதை, காதலுக்கும் கவிதை, விடுதலைக்கும் கவிதை, விண், மண், பிரபஞ்சம் என சுற்றியடித்தன பாரதியின் மொழி. அந்த வசீகரிக்கும் நிழலில் புகுந்து திரிந்தன காடும் கரையும்.

“அக்கினி குஞ்சொன்று கண்டேன்.
அதை அங்கொரு காட்டினில்
பொந்திடை வைத்தேன்.
வெந்து தணிந்தது காடு
தழல் வெப்பத்தில் குஞ்ஞென்றும்
மூப்பென்றும் உண்டோ“

என ஆடித்திரிந்தான். “வார்த்தை தவறி விட்டாய் கண்ணம்மா மார்பு துடிக்குதடி“ எனக் கூவினான். “நல்லதோர் வீனை செய்தே அதை நலன் கெட புழுதியில் எறிவதுண்டோ“ என சிவசக்தியிடம் மன்றாடினான். “காணி நிலம் வேண்டும் பராசக்தி“ என்றான். “என்னை சுடர் மிகு அறிவுடன் படைத்து விட்டாய்“ என திமிறினான். இறுதியில் “காலா வாடா உன்னை காலால் மிதிப்பேன் வாடா“ என இறந்தே போனான்.

பாரதி இறந்தாலும் அவனது மொழியும் பகையும் இன்னும் இறந்துவிடவில்லை.

கவிதைகள் எழுதுதல் என்பதன் முதல் ஆசானாக எப்பொழுதும் பாரதியே எனக்குள் இருந்திருக்கிறான். எங்கிருந்து புரட்டப்பட்ட வரிகளோ அவனிடம் தஞ்சமடைந்து பூகம்பங்களாக வெடித்திருக்கின்றன. வறுமையும், பட்டினியும் அவனது கவிதைகளுக்கு எந்த வகைப்பாட்டினையும் விதைத்திருக்கவில்லை. மூர்க்கத்தனமான அவனது சொற்களின் வீரியத்தினை புரிந்து கொள்வதற்கு இன்னும் எத்தனையோ நவீன வாசிப்புக்களை நுகர வேண்டும் என அடிக்கடி நினைத்துக் கொள்வேன். சுதந்திர மறுப்பு மாயைகளுக்கு வெடிகுண்டாக ஜீவித்திருந்த அவனது கவிதைகளில் தன்மானமே உயிர்ப்பெற்றிருந்தன. பிராமண சாதிய மேல் பாகுபாட்டினை முதலில் கட்டுடைத்தான் பாரதி. மரபின் தொடர் வாசனை அவனது கவிதைகளில் பரவியிருந்தாலும், மாமூலான சமூக வாழ்வின் இன்னோரன்ன பார்வைக்காக அவன் கீழ் வர்க்கத்தின் கவிஞனாகவே அடையாளப்படுத்தப் பட்டான் அப்போதைய மேல் குடியினரால் பாரதிக்கு அதுவே சாத்தியமானது.

ஆங்கிலத்தை நேசித்தான் பாரதி, அதிலிருந்த வெளிப்படை வாதத்தினை தமிழுக்கு கொண்டு வருவதில் அவனுடைய எழுத்துக்கள் பெரும் பங்காற்றின. சூழலில் காணும் அனைத்தையும் பாடித்திருந்தவன் ஐரோப்பிய அரசியல் குவியலுக்கு மட்டுமே எதிர்ப்பாளனானான். மற்றப்படி ஐரோப்பிய கல்வியல் முறைக்கோ, பெண் சுதந்திரத்திற்கோ, வர்ணமற்ற உறவு முறைக்கோ பாரதி எதிர்ப்பாளனாகவில்லை. சுதந்திரம் எனும் கொடிய சொல் பாரதியினை ஆட்டிப் படைத்திருந்தாலும் எதில் சுதந்திரம் வேண்டும் என்பதில் பாரதியின் கவிதைகள் வேறாகியே நின்றன.


முறுக்கு மீசை, கோணலான தாடி, ஐரோப்பிய ஆடை என தமிழ் புலவர் முறைக்கு எதிர்ப்பான செயற்பாடுகளே பாரதியிடம் இருந்தது. நவீன கவிதையின் போக்கு பற்றியெல்லாம் ஐரோப்பிய இலக்கியங்களில் இருந்தே கற்றுக் கொண்டான். தமிழுக்கு அவற்றை கொண்டு வந்து சேர்ப்பதில் சுதந்திரம் எனும் போர்வை தேவைப்பட்டது. அந்தப் போர்வையினை ஒரு போக்குக்காகவே பாரதி பயன்படுத்திக் கொண்டான். அவனுடைய தந்தை வெள்ளையர்கள் மீது கொண்டிருந்த அபரீதமான நம்பிக்கை வர்த்தக முரண்பாட்டில் உடைந்த போது கூடவே வெள்ளையர்கள் பற்றிய நம்பிக்கையும் பாரதியை விட்டு நகர்ந்தது. பாரதி வேண்டிய சுதந்திரம் அரசியல் சுய அமைப்பாக மட்டுமே இருந்தது. முழுமையான ஒரு மாற்றியல் அமைப்பினை சாதி வெறிச் சமூகத்திடம் பாரதி கொடுக்க விரும்பவில்லை.


பாரதி சாதியை எதிர்ப்பதே சுதந்திரம் என்றானே தவிர வெள்ளையர்களை எதிர்ப்பதல்ல. வெள்ளையர்களிடம் இருந்து நிறையவே கற்றுக் கொள்ள விரும்பினான். “தன் செயல் எண்ணி தவிப்பது தீர்ந்திங்கு – நின் செயல் செய்து நிறைவு பெறும் வன்னம் நின்னைச் சரணடைந்தேன்“ என்கிறான். பாரதி இந்திய சுதந்திர எதிர்ப்பாளனாகவே இருந்தான் என்பது மாற்றுப் பார்வை.

தன் வறுமைக்காக பலரிடம் கையேந்தி தோற்றுப் போன பாரதியின் பல கடிதங்கள் இன்றும் சான்றாகின்றன அவனுடைய தமிழ் எதிர்ப்புணர்விற்கு. தமிழை காப்பாற்ற அதனை ஆங்கில மொழியில் மாற்றியமை என்றான். இது ஒரு வகையான நக்கல் முறைமைதான். வெள்ளையர்களின் ஆட்சியில் திருப்தியடைந்த பாரதி ”துன்பம் இனியில்லை சோர்வில்லை தோற்பில்லை... நல்லது தீயது நாமறியோம்... அன்பு நெறியில் அறங்கள் வளர்த்திட, நல்லதை நாட்டுக தீமையை ஓட்டுக” என பாரதியின் சுதந்திரம் சாதியற்ற சுதந்திரமாகவே இருந்தது...

”மிடுமையும் அச்சமும் மேவி என் நெஞ்சில்–
குடிமை புகுந்தன கொன்றவை போக்கென்று – நின்னைச்
சரணடைந்தேன் கண்ணம்மா”

பாரதி ஐரோப்பிய ஆதரவாளனும், சாதி எதிர்ப்பாளனும், அற்புதமான கவிதைகளின் காதலனுமாவான்.




## பாரதி யார்?

பாரதிப்
பாடியவன் பாரதி
சொல்லிக்
கொண்டிருக்கும்போதே
விளங்கிக் கொள்வதற்காய்
கிள்ளிக் கொண்டிருக்கும்போதே
கிளர்ந்தெழுவதற்காய்
பாடியவன்
காய் – பாடியவன்
பாரதி
மானுடத்தைக்
கனியாக்குவற்காய்

சேர்ந்து வாழ்வதை
சொல்லித் தந்தவன்
சோர்ந்து விழுவதைக்
கிள்ளி எறிந்தவன்

பண்டிதத் தமிழை
புதுக்க விதைத்தவன்
புதுக்கவி தைத்தவன்
அவனால்
எத்தனை
புதுக்கவிதைகள்
இன்று

நாட்டில் நடப்பதைச்
சொல்லிக் கொடுத்தவன்
மட்டுமல்ல
கவிஞர்களுக்கு
ஏட்டில் நடப்பதையும்
சொல்லிக் கொடுத்தவன்

விலங்கு போட்டு
வைத்திருந்த
தமிழ் கவிதையை
விளங்க வைத்து
விடுதலை
வாங்கித் தந்தவன்

ஏனெனில்
அவன் சுதந்திரப் பாட்டுக்காரன்

நாட்டுச் சுதந்திரத்திற்காய்
பாட்டுப் பாடியவன்
பாட்டுச் சுதந்திரத்திற்காய்
நாட்டைப் பாடியவன்

தன்,
தலைப்பாகைக்குள்
தன்னை வைத்தவன்
தன் – தலைப் பா
கைக்குள் வைத்தவன்

எம்மோடு
சிறு வயது முதல்
ஓடி விளையாடி
காலை எழுந்தவுடன்
நல்ல
படிப்புச் சொல்லிக் கொடுத்து

சிந்து நதியின் மிசை
தமிழ் நிலவுச் சோறூட்டி
எம்மோடைக்கியமானவன்
பாரதி

எம் பேனா
பாரதிக்கு
உடைமை ஆனது

பாரதி
எம் பேனாவுக்கு
டை – மை ஆனான்

காலச் சக்கரத்திலே
அவன் கவிதை சர்க்கரை
இனிக்க மட்டுமல்ல
உறைக்கவும் செய்தது

உணர்வுகளைத் தட்டி எழுப்பி
உண்மைகளை
உரைக்கவும் செய்தது

பாரதி – நேற்று எழுதிய
கவிதையில்
இன்றும் வாழ்பவன்

நாளையும்
உயிரோடிருப்பதற்காய்
நாற்று நட்டவன்

ஏனெனில் அவன்
சொல்லேணி வைத்து
மில்லேனியக்
கவிதை பாடியவன்

பாரதியின்
கவிதை படிக்காதவன்
எழுதிக் குவித்தாலும்
பேனைப்
பிடிக்காதவன்

அதனால் தான்
பாரதி
தன்னை யாரென்று
கேட்கச் சொன்னான்

பாரதி – யார்?
கேட்டுப்பார்

அப்போது உனக்கு
நீ யாரென்று
தெரியும்!

என்.நஜ்முல் ஹுசைன்

## மனநலமும் ஆலோசனையும் 61

# பயனற்ற எண்ணங்கள்!

சராசரியாக ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு சுமார் 60,000 வரையிலான எண்ணங்கள் மனதில் உருவாகின்றன என்று ஆய்வுகள் கூறுவதை நாம் படித்திருக்கிறோம்.

எண்ணங்கள் ஒரு மௌனமான மொழி என சொல்லப்படுகிறது. இவை ஒரு அமைதியான பேச்சாக அல்லது சுய தொடர்பாக அதாவது நாமே எம்முடன் உரையாடும் உள்மொழியாக எங்களுக்குள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த எண்ணங்களில் நல்ல, பயனுள்ள எண்ணங்கள் ஏற்படுவது போன்று தேவையற்ற, பயனற்ற எண்ணங்களும் ஏற்படத்தான் செய்கின்றன. இவ்வாறான எண்ணங்கள் வராமல் இருக்க என்ன செய்யலாம் அல்லது இவை வந்தால் அவற்றை எப்படி கையாள வேண்டும் என்ற வினாக்கள் எங்களில் உருவாகலாம்.

எமது மனதில் அச்சமான, பிழையயான, பொருந்தாத எண்ணங்கள் வந்து செல்லவது இயல்பானது.

நோய் பற்றிய எண்ணங்கள்,

பிரச்சினைகள் சார்ந்த எண்ணங்கள்,

சந்தேகம் தொடர்பான எண்ணங்கள்

கவலை, பயம் சார்ந்த எண்ணங்கள்

என பலவித்திலான எண்ணங்கள் வரலாம்.

எமது மனதில் வரும் இவ்வாறான எல்லா எண்ணங்களுக்கும் நாம் செவிசாய்க்க வேண்டுமா?

மனதில் வரும் எல்லா எண்ணங்களையும் உண்மை என்று எடுத்த எடுப்பில் நாம் ஒருபோதும் நம்பிவிடக் கூடாது.

மனம் என்ன சொல்கிறது, அல்லது மனதில் எவ்வாறான எண்ணங்கள் வருகின்றன என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

பின்னர் மனதில் வரும் எண்ணங்களில் என்ன உண்மை இருக்கின்றன என்பதை அவதானமாக நோக்க வேண்டும்.

இந்த முறைக்கு நாம் பழகினால் எண்ணங்களின் தன்மையை புரிந்து கொள்ள முடியும்.

எல்லா நேரத்திலும் மனம் சரியாகத்தான் சிந்திக்கிறது என்று நாம் நம்பக் கூடாது. அப்படி நம்பினால் அது பாரிய மனப்பிரச்சினைகளை உருவாக்கிவிடும்.

பிழையையும் சரியையும் சரியாக பிரித்தறிய முடியாத நிலையும் ஏற்படுத்திவிடும்.

பிழையாக வரும் எண்ணத்தை சரியாக நோக்குவதற்குறிய சக்தி எம் மனதில் இருக்கிறது.

அதை நாம் வழர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு விடயத்தைப்பற்றி நாம் எவ்வளவு சிந்திக்கிறோம் என்பதில் எமக்கு கட்டுப்பாடு தேவை.

எங்கள் கட்டுப்பாட்டில் இல்லாத எண்ணங்கள் எங்களை கட்டுப்படுத்த ஆரம்பிக்கும்.

சில சமயங்களில் கட்டுப்படுத்த கடினமான எண்ணங்களும் வரலாம்.

இருந்த போதிலும் அதைப்பற்றி கவலைப்படுவது சிறந்த முடிவுக்கு உத்தரவாதமாக இருக்காது.

மனம் ஒரு தவரான எண்ணத்தை தந்தால்,

– இந்த எண்ணம் சரியானதா? உண்மையானதா?

– இந்த எண்ணத்திற்கு ஒரு அடிப்படை உள்ளதா?

– இந்த எண்ணம் எனக்கு ஒரு சக்தியை தருகிறதா? சக்தியை பரிக்கிறதா?

– இந்த எண்ணத்திற்கு சரியான ஒரு பதிளை முன்வைக்க முடியுமா?

– இந்த எண்ணத்திலிருந்து எதையும் கற்றுக்கொள்ள முடியுமா?

– இந்த எண்ணம் இல்லாதிருந்தால் என் வாழ்க்கை எப்படியிருக்கும்?

இந்த வினாக்களை கேட்டுப் பார்க்கும் போதே எங்கள் எண்ணங்கள் எப்படியானவை எனபதை புரியலாம். அடுத்த முறை பொருந்தாத எண்ணங்கள் ஏற்படும் போது எங்களை நாங்களே கேட்டுப் பார்ப்போம்.

இந்த வினாக்களை கேட்டு அவற்றுக்கான பதில்களை ஒரு தாளில் எழுதுவதன் மூலம் மிகச்சிறந்த பதிலை பெற்றுக் கொள்ளலாம். அவற்றிலிருந்து இலகுவாக வெளிவரலாம்.

எமது எண்ணங்களுக்கு நாமே பொறுப்பானவர்கள். எம்மால் அவற்றை நிர்வகிக்கலாம் என்ற உறுதியான நம்பிக்கை எமக்கு இருக்க வேண்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---

## மங்கையொளி

பயாஸா பாஸில்

# உங்களின் தனிப்பட்ட வாழ்வில் வெளிக்காட்ட கூடாத விடையங்கள்!

*1. உங்களுடைய சந்தோஷமான திருமண வாழ்வை பற்றி சமூக வலைத்தளங்களில் பகிர வேண்டாம்.*

*2. உங்களுடைய குழந்தைகளின் சாதனைகளை, வெற்றிகளை சமூக வலைத்தளங்களில் பகிர வேண்டாம்.*

*3. உங்கள் வாழ்க்கையில் முக்கியமான தருணங்களில் வேலைப்பளுக்களில் இருந்தால் நேரமின்மை என்று சமூக வலைத்தளங்களில் பகிர வேண்டாம்.*

*ஏனென்றால் உண்மையாகவே*

*1. எல்லோரும் உங்களை பார்த்து மகிழ்ச்சி அடைவதில்லை.*

*2. நீங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரும் போது "சிறப்பு" என்ற பதில்களை வழங்கினாலும் அது பொய்யானது.*

*3. உங்களுக்கும் உங்களுடைய குடும்பத்தினருக்கு கண்ணூறு ஏற்படும்.*

*4. பிறர் உங்களுடைய வாழ்வை பார்த்து பொறமை படுவார்கள்.*

*5. நீங்கள் பகிரும் புகைப்படங்களை எங்கு வேண்டுமானாலும் பகிருவார்கள்.*

*6. உங்களுடைய வாழ்வின் முக்கிய விடையங்கள் அதாவது குடும்ப வாழ்க்கை, திருமண வாழ்க்கை , தொழில் போன்ற விடையங்களை சமூக வலைத்தளங்களில் பகிர்வதை தடுத்துக் கொள்ளுங்கள்.*

தமிழ் மொழி பெயர்ப்பு - சுபஹ்றியாயாயில்



---

# ஊடகவியலாளர் பைஷலுக்கு சமூக விஞ்ஞான "சாஹித்ய மாகாண விருது"

சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷலுக்கு சமூக விஞ்ஞான "சாஹித்ய மாகாண விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நாடாத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டு மாகாண இலக்கிய விழாவில் சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் சமூக விஞ்ஞானம் (ஆயுள்வேதம்) "சாஹித்ய மாகாண விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ. ஜி. திசாநாயக்க தலைமையில் (11) திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இவ்விழாவின்போது கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீலினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம், சான்றிதழ் மற்றும் காசோலை போன்றன வழங்கி



கௌரவிக்கப்பட்டார்.

பொதுமக்களுக்கு நோய் பற்றிய தெளிவையும், அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெற்றுக்கொள்ளலாம் என்ற விழிப்புணர்வுகளை வழங்கும் நோக்கில், துறைசார் வைத்திய நிபுணர்கள் ஊடாக பெற்றுக்கொண்ட மருத்துவ ஆக்கங்களை "நலன் தரும் மருத்துவம்" என்ற பெயரில்,

சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் தொகுத்து வெளியீடு செய்திருந்தார்.

அந்நூல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு "சமூக விஞ்ஞானம்" (ஆயுள்வேதம்) "சாஹித்ய மாகாண விருதை வழங்கி கௌரவித்தனர்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். எம்.பி.எஸ்.ரத்நாயக்க ஆகியோருடன் கௌரவ அதிதிகளாக அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) வெளிவருகின்ற **"உதயம்"** பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.

editor.uthayam@gmail.com



# கம்பஹாவின் சம்பியனாகிய உடுகொட ஜின்னா

அரபாத் பஹுர்தீன்

கம்பஹா லீக் கால்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பிரபல அணியான ஜெட்லைனர் அணியை தோற்கடித்து உடுகொட ஜின்னா அணி சம்பியனாகியது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை கம்பஹா சிரீ போதி அரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கமபஹா ஜெட்லைனர் உடுகொட ஜின்னா ஆகிய அணிகள் மோதின.
விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் இரு அணிகளும் பலமாக மோதிக்கொண்டன.
ஆட்டத்தின் முதற் பாதியில் இரண்டு அணி வீரர்களும் சளைக்காது போராடியதால் கோல்களைப் பெறும் வாய்ப்புக் கிட்டவில்லை.
இரண்டாம் பாதியில் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிக் காட்டிய ஜின்னா அணியினர் ஒருகோலைப் பெற்று சம்பியனாகினர்.
இறுதிப்போட்டியின் சிறந்த வீரராக ஜின்னா கழகத்தின் ரிஸ்வானும் சிறந்த கோல் காப்பாளராக நஸ்ஹானும் தெரிவாகினர்.
ஜின்னா கழகத்தின் முக்கிய வீரர்கள் ஐவர் இல்லாத நிலையில் நிலையில் இந்த வெற்றி ஈட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.







ஜின்னா அணிக்கான பயிற்றுவிப்பாளர்களாக பகுமான் மற்றும் சப்ரான் ஆகியோர் பணியாற்றினர்.
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணம் மற்றும் ஏனைய கிண்ணங்களையும் வழங்கி வைத்தார்.
இந்த லீக் தொடரின் அரையிறுதிப் போட்டியில் ஜின்னா அணி 1.0 யடியன அணியைத் தோற்கடித்தது.

# மிராஸின் சகலதுறை அசத்தலில் மே.இ.தீவுகளை வீழ்த்தியது வங்கதேசம்



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரின் முதல் போட்டியில் மெஹ்தி ஹசன் மிராஸின் சகலதுறை அசத்தலால் 7 ஓட்டங்களால் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது.
சுற்றுலா பங்களாதேஷ் அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையிலான மூவகை கிரிக்கெட் தொடர்களில் முதலில் நிறைவுற்ற ஒருநாள் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணி 3:0 என வெள்ளையடித்துக் கைப்பற்றி யிருந்தது. இந்நிலையில் அடுத்த தொடரான 3 போட்டிகளைக் கொண்ட இருபதுக்கு இருபது தொடரின் முதல் போட்டி இலங்கை நேரப்படி கடந்த 16ஆம் திகதி இடம்பெற்றது.
இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதற்கமைய துடுப்பாட்டக் களம் நுழைந்த பங்களாதேஷ் அணிக்கு சௌமியா சர்கார் 43 ஓட்டங்களையும், மொஹ்தி ஹசன் மிராஸ் ஆட்டமி ழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் அக்கீல் ஹொசைன் மற்றும் மெக்கேய் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.
பின்னர் பங்களாதேஷ் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 148 என்ற எட்டக்கூடிய வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பாட களம் நுழைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பங்களாதேஷ் சுழல்பந்து வீச்சாளரான மெஹ்தி ஹசன் மிராஸ் 4 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்ட 19.5 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 7 ஓட்டங்களால் தோற்றுப் போனது. துடுப்பாட்டத்தில் ரோமன் பவல் 60 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். இந்த வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என முன்னிலை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச கிரிக்கெட்டிற்கு விடை கொடுத்தார் இமாத் வஸீம்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான இமாட் வஸீம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதான அறிவித்துள்ளார்.
35 வயதான இமாட் வஸீம் கடந்த 2015ம் ஆண்டில் பாகிஸ்தான் அணிக்காக ரி20 கிரிக்கெட்டில் அறிமுகம் ஆனார். இவர் பாகிஸ்தான் அணிக்காக இதுவரையில் 55 ஒருநாள் மற்றும் 75 ரி20 போட்டிகளில் களம் கண்டுள்ளார். மேலும் 55 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 986 ஓட்டங்களையும், 44 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார் அத்துடன் 75 ரி20 சர்வதேச போட்டிகளில் பங்கேற்று 554 ஓட்டங்களைப் பெற்றுள்ளதுடன், 73 விக்கெட்டுகளையும் வீழ்த்தி உள்ளார்.
மேலும் இமாத் வஸீம் கடைசியாக கடந்த ஜூன் மாதம் அயர்லாந்துக்கு எதிரான ரி20 போட்டியில் பாகிஸ்தான் அணியை பிரதிநிதித்துவம் செய்து ஆடியிருந்தார். அண்மைக் காலமாக பாகிஸ்தான் அணியில் இடம் பிடிக்க முடியாத அவர் தற்போது சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
இவரது ஓய்வு முடிவு ரசிகர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இமாத் வஸீம் உள்நாட்டு கிரிக்கெட், மற்றும் டி20 லீக் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவார் என குறிப்பிட்டுள்ளதுடன், இலங்கையில் தற்சமயம் இடம்பெற்று வரும் ரி10 போட்டிகளில் இமாத் வஸீம் பங்கேற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.